

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

தி.மு.க. வார வெளியீடு



வெள்ளமோ வெள்ளம்!



காட்சி காணீர்!



குடந்தை பட்டபாடு மேலே !

1. கும்பேசுவரர் கோயில் பிரகாரத்துள்...

2, 3, 4, வீதிகளுக்குள்...குடிசைகள், வீடுகள் பல சாய்ந்தன.

5. போக்குவரத்துக்கள் திண்டாடின.

6. வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்த நிலை.

7. போலீஸ் லையன் பட்டபாடு

(படங்கள் உதவியவர் குடந்தை 'அறப்போர்' விற்பனையாளர் தோழர் கண்ணுராவ்.)

வெள்ளம் படுத்தியபாடு சம்பந்தமான படங்களை வேதனையுடன் வெளியிடுகிறோம்! நமக்குக் கிடைத்த காட்சிகள் இவை! கிடைக்காதவை ஏராளம்! இப்படிப்பட்ட இயற்கையின் கோரத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற பொதுமக்களும், தி. மு. க. வினரும்—படாத பாடுபட்டிருக்கிறார்கள். இன்னும் உதவி வருகிறார்கள்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் அளகேசன், தன் பொறுப்பை "வழக்கம் போல" மறந்து அதிகாரிகளைக் குற்றம் சாட்டியிருக்கிறார்!

காங்கிரசாட்சியில் மிரட்டியவருக்கெல்லாம் நடுங்கவேண்டிய நிலைமைக்கு ஆளான அதிகாரிகள் என்ன செய்வார்கள்? தக்க சமயத்தில் சரியான ஏற்பாடுகளைச் செய்யத்தானே வெள்ள செய்தி எட்டியதும் அமைச்சர்கள் கக்கனும் ராமையாவும் ஓடினர்!

அவர்கள் போயிருந்தும் 'தவறுகள்' நிகழ்ந்தனவென்றால் குற்றம் அதிகாரிகளுடையதா? இல்லை! அமைச்சர்களுடைய காங்கிரஸ் அரசுதான்— குற்றவாளியாகும்!! "சரியான பாதுகாப்புகளை அதிகாரிகளை ஆட்டிப்படைக்கும் வேகத்தில் படையெடுத்த மந்திரிகள் என்ன செய்தார்கள்?

எங்கே பொதுமக்கள் காங்கிரசாட்சியைக் கண்டிப்பார்களோ என்று எண்ணி முந்திக் கொள்கிறார் அளகேசன்!!

அவர் வாக்குப்படி பாதுகாப்பு தரப்படவில்லை. மக்களுக்கு அஜாக்கிரதையால்தான் வெள்ளம் விரிந்தது என்கிற உண்மை தெளிவாகிறது. இதனை பொது மக்களுக்கு எடுத்துக் காட்டியவர் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்! அதிகாரிகள் மீது பாயும் வகையில் அளகேசன் பேசியிருந்தாலும் அரசாங்கம் சரிவர நடக்கவில்லை என்கிற உண்மை அவர் வாயாலேயே நமக்குக் கிடைக்கிறது!!

மக்களுக்கு இடுக்கண் என்றால் பாடுபடும்கழகம், நமது சக்திக்குட்பட்ட சகல உதவிகளையும் மேற்கொண்டிருக்கிறது. இன்னும் செய்து வருகிறது!

வெள்ளத்தால் உண்டான விபரீதங்கள் கொஞ்சமல்ல—மண்மேடான நிலங்களை 'சர்வே' செய்து யருடைய நிலம் என்று கண்டுபிடிக்கவே முடியாதென்கிறார்கள்! ஒரு தனி ஆறே ஓடிக் கடலில் கலப்பதுபோல் ஓடிக் கொண்டிருக்கிறதாம்!! இந்த

—0—



அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 1 வெள்ளி 28-7-61 கதிர்- 22

வாழ்க காமராசர் !

முதலமைச்சர் காமராசருடைய பிறந்தநாளை கடந்த கிழமை கொண்டாடியிருக்கிருர்கள்! தன்னுதிக்கத்தைத் தொண்டின் மூலம் வளர்த்துக் கொண்ட அவருக்கு, நமது மதுரை மாநாட்டில் கழகச் சார்பில் வாழ்த்துதலைத் தெரிவித்தார், நமது அவைத் தலைவர் நெடுஞ்செழியன் அவர்கள். கொளகைகள் மோதிக் கொள்ள வேண்டுமே ஒழிய, தனிப்பட்டவர்களுக்கிடையே அன்பும் மனிதப் பண்பும் மலர வேண்டுமெ ்பதில் நமது கழகமும் நமது அண்ணு அவர்களும் காட்டி வரும் கண்ணியம் நாடு அறிந்ததே. அந்த வகையில் நாமும் திரு. காமராசருக்கு நம்முடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். நல்ல மனமும், திடமான உடலும், நோயற்ற வாழ்வும் பெற்று அவர் வாழ்க! வாழ்க!!

* * *

பணி புரிவீர் !

மதுரை மாநாடு முடிந்து சென்ற கழக அமைப்புகளுக்கு, ஒரு சிறிது கூட ஒய்வு கொடுக்கவில்லை, தலைமைக் கழகம். மாநாட்டில் அண்ணு அவர்கள் அறிவித்ததையொட்டி மாவட்ட வாரியாகத் தேர்தலில நம்முடைய நிலையென்ன என்பதைத் தெரிந்துவர, ஆய்வாளர்கள் அனுப்பப்பட்டிருக்கிருர்கள், தேர்தலுக்குரிய பிரச்சார முறைகளிலும் வகைகளிலும் தலைமைக்கழகம் இப்போது முதலே கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறது! எப்போதையும்விட இந்தத் தேர்தலில் காமராசர், நானுவித உபாயங்களையும் செய்யத் திட்டமிட்டு வருகிருர். அதற்கேற்ற பணமு ் அதிகார பலமும் அவருக்கு இருக்கிறது. 'காங்கிரசை விட்டால் வேறு கட்சியில்லை' என்று தாளம்போடும் கூட்டத்தையும் அவர் தன்னுடைய புன்சிரிப்பால், வெகு எளிதில் பெற்று வருகிருர். அப்படிப்பட்ட ஒரு தனியாள் ஆதிக்கமும், அவர் பெயர் சொல்லி வயறு கழுவும் அரசியல் கழுகுகளும் பெருத்து வருகிருர்கள். எங்கெங்கு நமக்கு நிறைய செல்வாக்கு இருக்கிறதோ, போன தடவை வென்ருேமோ, அங்கெல்லாம் சிர்குலைவு உண்டாவதற்கான திட்டங்கள், காங்கிரஸ் வட்டாரத்தில் கடும் வேகத்துடன் தயாரிக்கப்படும். இவைகளை எல்லாம் கட்டுப்பாடும் ஒழுங்கான வேலை முறையுமிருப்பின் வெகு எளிதில் நாம் முறியடித்து விடலாம்!

செய்வோம்—செய்வோம் என்று நாட்களைத் தள்ளக்கூடாது. ஒட்டர்கள் லிஸ்டில் பெயர்களிருக்கிறதா, என்று பார்க்க வேண்டும். விடுபட்ட பெயர்களைச் சேர்க்க வேண்டும். வாரத்தில் ஒருநாள் என்று ஏற்படுத்திக் கொண்டு கிளைக் கழகங்கள், கழகத்துக்கு ஒட்டு விழும் வகைகள் என்ன என்பதை யோசிக்க வேண்டும். அறிஞர் அண்ணு அவர்கள் சொல்லியது போல, நாம் வளர்ந்துவிட்டோம் என்ருல் அதன் அறிகுறி தேர்தலில் தான் தெரிய வேண்டும். அதற்காக, நாம்ஒவ்வொருவரும் என்ன செய்யப் போகிருேம்! எத்தனை ஒட்டர்களை நம்முடைய தெருவில் சாவடிக்கு இட்டுச் செல்லப் போகிருேம்? நம்முடைய ஊரில் எத்தனை தொண்டர்கள், இப்பணியில் ஈடுபடுவார்கள்? இதுபோன்ற பலப் பல பிரச்னைகளில் தோழர்கள் இப்போது முதலே ஊககம் காட்ட வேண்டும்! காலப்புரு பறக்கிறது—கடமையைச் செய்யும் வேலை வந்துவிட்டது.

* * *

மன்னியுங்கள் !

'அறப்போர்' ஆரம்பித்து சில மாதங்களேஆகியும் உங்களுடைய அன்பைப் பெற்று விட்டது. ஒவ்வொரு இதழையும் குறித்த நாளுக்கு முன்பே அனுப்புவதற்கு எவ்வித வசதியும் தடையாயில்லை—அச்சடிக்கும் சிக்கல் தவிர.

புத்தக வெளியீட்டுக் காலமாதலால், அச்சக வேலைகள் அதிகம். அச்சகத்தார்எவ்வளவுஒத்துழைத்திடினும், போதாத நிலைஏட்டுக்கு! என் செய்வேன்? இதே காரணத்தாலேயே 22ந்தேதி வந்திருக்க வேண்டிய மாநாட்டு மலர் 24ல் வர நேர்ந்தது. ஒவ்வொரு விநாடியும் நான் துடித்தேன். ஆனுல் என் இருதய வேகம் அச்சியந்திரத்திற்கு இல்லையே!!

சொந்த அச்சகம் தேடியலைகிறேன்—இதழுககு மட்டும் தனியானது என்று இருந்தாலொழிய கட்டுபடியாகாது, அடித்து சரியான சமயத்தில் கொணர!

மலரின் இரண்டுநாள் தாமதத்துக்கு என்னை மன்னியுங்கள்! சென்னை—சேலம் முதலிய ஊர்களின் விற்பனையாளர்களுக்கு, தேவையான மலர்கள் அளிக்க முடியவில்லை. எனக்கு ஒத்துழைப்புகள் நல்கிடும் நண்பர்கள், இவர்கள். இன்னும் பலருக்கு விரும்பியபடி தேவையானதை அனுப்ப இயலவில்லை. எல்லோருடைய மன்னிப்பையும் கேட்டுக் கொள்கிறேன் சில விற்பனையாளர்கள் இரண்டுநாள் கூடப் பொறுக்காமல் தந்தியும் கடிதங்களுமாகத் தாக்கி விட்டனர். அறப்போரைக் காண அவர்கள் காட்டிடும் துடிப்புக்கு என் நன்றிகள்!! மலர்கண்டு ஏராளமாக பாராட்டுக் கடிதம் எழுதியிருக்கிருர்கள். இதுவே, எனக்கு லாபம். அன்பே, என் மூலதனம். வளர்க சகோதர பாசம். வணக்கம்

60,00,000 பேர்களைக் கொன்ற காதகன்!

அன்புள்ளம் கொண்ட அண்ணு அண்ணல் அவர்களுக்கு தங்கள் அறப்போர் வாசகன் என்ற முறையில் எனக்கு எழுந்துள்ள இந்த சந்தேகத்தை தங்கள் அறப்போரில் விரிவாக நிவர்த்திக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் இதழில் தொடர்பாக எழுதி என்னை வியப்பில் ஆழ்த்திய ஈச்மேன் வரலாறும் அவன் புரிந்த 60,00,000 கொலைகளும் உண்மையில் வருந்துவனவாக இருந்தாலும் யூதர்கள் ஜர்மனியில் செய்துவந்த ஆதிக்கம் காரணமாகத்தான் நிகழ்ந்ததாக ஹிட்லர் வாழ்க்கை வரலாறு என்ற புத்தகத்தில் 20-வது பிரிவு யூதர்களும் ஆரியர்களும் என்ற அத்தியாயத்தில் கூறுகிறது (தங்களின் பார்வைக்கு அப்புத்தகத்தின் இருதாள்களையும் இத்துடன் அனுப்பி வைத்திருக்கிறேன்) உண்மை இப்படியிருக்க தாங்கள் யூதர்களை உயர்த்தியும் ஜர்மானியர்களை தாழ்த்தியும் எழுதுவதின் காரணமென்ன? (ஹிட்லர் தன் நாட்டிற்கு செய்த தியாகத்திற்காகவாவது ஜர்மானியர்களை புகழ்ந்திருக்கலாம்) எடுத்துக்காட்டாக நம் தமிழகத்தில் பார்ப்பனர்கள் செய்துவந்த கொடுமைகளைக் கண்டு நாம் கொலைகள் செய்யாவிட்டாலும் மனம் குமுறவில்லையா இதைப்போல் தானே ஜர்மானியர்கள் செய்திருக்க முடியும்.

சமுத்திர பாண்டியன்,
விருதுநகர்.

*

விருதுநகர் சகோதரர் விடுத்துள்ள கடிதத்திலுள்ளது போன்ற ஐயங்கள் அனைவருக்கும் எழக்கூடும்! ஒரு இனத்தின் மீது எப்படிப்பட்ட 'வெறியுணர்ச்சியும் உண்டாக்கப்படக்கூடாது என்பதே என் வாதமாகும். விருதுநகர் சமுத்திர பாண்டியன் அவர்கள், 'ஹிட்லர் வாழ்க்கை வரலாறு' நூலிலிருந்து பின்வரும் பகுதிகளையும் அனுப்பியிருக்கிருர்:

"நாட்டியம், நாடகம், கலை முதலியவற்றிலும், அரசியல் மேடைகளிலும் யூதர்களின் செல்வாக்கு நிரம்பியிருந்தது.

யுத்தம் முடிந்தது. ஜர்மானியப் போர் வீரர்கள், போர்க்களத்திலிருந்து திரும்பி வந்தார்கள். எந்தெந்த ஸ்தாபனங்களை இவர்கள் கௌரவக்குறை வென்று அவமதித்து வந்தார்களோ அவை, இப்பொழுது யூதர்களால் கைப்பற்றப்பட்டுசெல்வத்திற்கும் செல்வாக்குக்கும் ஊற்றுக்கள் போலிருப்பதைக் கண்டார்கள். மற்றும் தாங்கள் எந்த ஸ்தாபனங்களில் இடம் பெறுவது கௌரவமென்று நினைத்தார்களோ அவை, இப்பொழுது மதிப்பிழந்து கிடப்பதையும் பார்த்தார்கள். ராணுவம் சலைக்கப்பட்டு விட்டது. அரசாங்க உத்தியோகத்திற்கு மதிப்பே கிடையாது. யூதர்கள் செல்வத்திலே புரண்டார்கள். ஜர்மானியர்கள் வறுமையிலேஉழன்

(8-ம் பக்கம் பார்க்க)

அண்ணன் தம்பிகள் நாம்!

மக்களுடையது நம் கழகம்!

மதுரை முத்து உரை

கண்ணீர்த்துளிபோல் அரும்பி கடலலைபோல் பேரோசை கிளப்பும் உங்களில் நானும் ஒருவன் என்பதை நினைக்கும்போது எனக்கு மெய்சிலிர்க்கிறது.

நாம் நமது வலிமையினல் திராவிடத்தின் ஒவ்வொரு சிற்றூரையும் வெற்றித் திருநகராக்கி மகிழப் போவதற்கு அறிகுறியாகத்தான் இன்று இந்த வீரத் திருநகரத்தில் நாம் முகாமிட்டிருக்கிறோம்.

நம்முடைய வளர்ச்சி எளிதானதல்ல — எதிரிகள் நிறைந்தது! நமது பாதை பாதுகாப்பானதுமில்லை — பயங்கரமான காட்டு விலங்குகளைப் போல் நம்மை வீழ்த்த ஆயுதமேந்திகள் உலாவியபடி இருக்கிறார்கள். நாம் நிராயுதபாணிகள்--அண்ணாவைத் தவிர, கொள்கையைத் தவிர நம் உள்ளத்தில் வேறு பலம் இல்லை எளியவர்கள் வலியவர்களைத் தோற்கடித்ததாகக் கதைகளை கூட நாம் பார்த்ததே இல்லை. ஆனால் நாம் ஆச்சரியப் படத் தக்க அளவில் அதைச் செய்து காட்டிவருகிறோம்,

நம்முடைய இயக்கத்திற்கு இது இளம் பிராயம்; இருந்தாலும் நமக்கு ஏற்பட்டிருக்கிற அனுபவம் அதிகம். பன்னிரண்டு ஆண்டுக் காலத்தில், நாம்; ஒரு கட்சியின் ஐம்பதாண்டுக்கால பக்குவத்தையும் வளர்ச்சியையும் பெற்றிருக்கிறோம. நம் கட்சியின் உறுப்பினர்கள் ஏறத்தாழ நாலரை இலட்சம் பேர்! தினம் ஒன்றுக்கு நூறுபேர் வீதம் கழகத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்ந்து வருகிறார்கள் என்பதை இந்தக் கணக்கு நமக்குத் தெரியப்படுத்துகிறது! மக்களுக்கு எப்படி நம்மீது இவ்வளவு நம்பிக்கை ஏற்பட்டது என்பதைத் தான் நாம் இன்றைக்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.

நமது பாதையில் நல்ல திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. மீண்டும் நாம் அந்தப் பாதையை ஒரு முறை திரும்பிப் பார்க்கிறோம்; பல அடக்குமுறைக் காட்சிகள் தெரிகின்றன. பலரது அங்கங்கள் சிதறிக் கிடக்கின்றன; மார்பிலே அடியோடும், துப்பாக்கி தோட்டாக்களோடும் திசைக்கு நாலு பிணங்கள் கிடக்கின்றன. சுகதுக்கங்களை இழந்தவர்களின் பெருமூச்சு கேட்கிறது. இவை தான் நமது உணர்ச்சிக்கு நிரந்தரமாக உயிரூட்டிக் கொண்டிருப்பவை.

நம்முடைய பலத்தை முறியடிக்க பல கோணங்களிலே இருந்து எதிர்ப்புக் கிளம்புவது உண்மைதான். ஆனால் எல்லா எதிர்ப்புகளையும் பொருட் படுத்திக் கொண்டிருப்பதற்கு நேரமில்லை. 'இந்தியா ஒரே நாடு' என்று கூறிக் கொண்டு இந்தியா

> பாண்டியன் நகர், ஜூலை 14—பாண்டியன் நகர் — தியாகராயர் பந்தல்-டி. எம். நாயர் அரங்கில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மூன்றாவது பொதுமாநாட்டில், மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் எஸ். முத்து எம். சி. அவர்கள் ஆற்றிய வரவேற்புரை.

முழுதும் பிரச்சாரம் செய்யும் பெரிய கட்சிகளைத்தான் நமக்குக் கௌரவமான எதிரிகள் என்று நாம் மதிப்பிட்டிருக்கிறோம். எதிர்க்க வேண்டிய பெரிய கட்சிகளை, எதிர்க்க வேண்டிய விதத்தில் எதிர்த்ததால்தான் நாம் இன்று இவ்வளவு பெரிய கட்சியாக வேரூன்ற முடிந்தது. செல்வாக்குப் பெற்றிருந்த இரண்டு பெரிய கட்சிகளை திராவிடத்தில் நாம், 'விலாசம்' தெரியாமல் செய்திருக்கிறோம். சர்வ கூட்ட மேடை தவிர தனி மேடை போட்டால் சோபிக்காத அளவுக்கு அவர்களை இறக்கிவிட்டிருக்கிறோம்; இன்னும் சில எதிரிகளை நமது தகுதிக்கு அப்பாற்பட்டவர்கள் என்று எண்ணி, கருத்தில் கொள்ளாமலே புறக்கணித்திருக்கிறோம்.

அறிஞர் அண்ணா அவர்கள் பலதடவை சொல்லியிருக்கிறார்கள்—'மனத்திலே தூய்மை இருப்பதால் நமது வாக்கிலே ஒளி இருக்கிறது; சுவையும் பயனும் பெற வெள்ளம்போல மக்கள் நம் பக்கம் வந்து கொண்டிருக்கிறார்கள்; உள்ளத்தில் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு உணர்ச்சி பிறப்பதில்லை; உணர்ச்சி இல்லாவிட்டால் பேச்சு அழு குரலாக இருக்கிறது' என்று! இது தான் நமது இரகசியம்!

நமது இரகசியத்தைப் புரிந்து கொண்டு நம்மை அழிக்கப் பலர் முயல்கிறார்கள். ஆனால், முயன்று கண்டு கொண்டவுடன் அவர்கள் நம் பக்கமே வந்து விடுகிறார்கள். ஏனெனில், தாய் நாடு — தாய் நாட்டு விடுதலை என்று எண்ணுபவர்களிடத்தில் தான் வீரமும், விவேகமும் பிறக்கின்றன. இதனால்தான் அண்ணா அவர்கள், நமது இரகசியத்தை பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தி வருகிறார்கள்.

நம்மிடத்தில் எவ்வகை ஆற்றல் இருந்தாலும், யாரிடத்திலும் இல்லாத — யாருக்கும் கிடைக்காத மற்றொரு சக்தி நம்மிடமிருக்கிறது.

அண்ணா என்ற திசை காட்டும் தீபத்தை நாம் ஒவ்வொருவரும் ஏந்தியிருக்கிறோம். இன்று திராவிடத்தில் ஒவ்வொருவர் இல்லத்திலும், உள்ளத்திலும் அண்ணா குடியிருக்கிறார்; அண்ணன் இல்லாவிட்டால் நீங்களுமில்லை—நானுமில்லை!

நாட்டில் எத்தனையோ கட்சிகளையும், தலைவர்களையும் நாம் பார்த்திருக்கிறோம். முதலாளி—தொழிலாளி என்று இருப்பதைப் போல் தலைவர் — தொண்டர் என்று 'வியாபார ஸ்தாபனங்களா'கத்தான் அந்தக் கட்சித் தலைவர்கள் உருவாக்கி வந்திருககிறார்கள்.

உலகத்திலேயே நாம்தான், அண்ணன் — தம்பி முறையில் ஒரு விடுதலை இயக்கத்தைக் கண்டிருக்கிறோம் — வளர்த்திருக்கிறோம்.

என்னுடைய வாழ்நாளில் நான் இரண்டு, மூன்று தலைவர்களிடம் நெருங்கிப் பழகியிருக்கிறேன் — மற்றவர்களைப் பற்றி அறிந்திருக்கிறேன். அவர்களிடமெல்லாம் இல்லாத பெருங்குணத்தை நமது அண்ணாவிடத்தில் காண்கிறேன்.

அண்ணா அவர்கள் பிறரது வளர்ச்சிக்குத் தடையாக இருந்ததில்லை. — உதவியிருக்கிறார். யாரையும் கெடுத்து அழித்து விட்டுப் புகழ் பெற்றவருமல்ல! தனக்குமீறி ஒரு ஆற்றல் எங்கோ உருவெடுக்கிறது என்பதை அறிந்தால் தன்னுடைய ஆற்றலை மென்மேலும் உயர்த்திக் கொண்டு வளர்ந்தாரே தவிர, சதி, சூழ்ச்சி என்பதே அவர் அறியாத ஒன்று! பெரியாருக்கும் — அண்ணாவுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு இதுதான்! பெரியார் மற்றவர்களை அழுத்தி வைத்துக் கொண்டு கட்சி நடத்துபவர்; அண்ணா, மற்றவர்களையும் வளர்த்துக் கொண்டவர்!

நாம் வெளியேறி வந்த 12 ஆண்டுகளில் பெரியார், தனக்கு பிறகு யார் என்று சொல்லக் கூடிய வகையில் யாரையாவது தயார் படுத்தியதுண்டா? யாருக்காவது பெரியாரைத் தவிர, திராவிடர் கழகத்திலுள்ள மற்றவர்களுடைய பெயர் தெரியுமா? ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தில் அந்தப் பஞ்சமில்லை! வாள்களைப்போல் வீரர்களும், கேடயங்களைப்போல் விவேகிகளும் நாள்தோறும் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்!

அண்ணாவுக்கு இன்று நாட்டிலிருக்கிற உன்னதமானபுகழில் சரிபகுதி, அவருடைய பெருங் குணத்தாலும், அடக்கத்தினாலும் கிடைத்தவை என்று நாம் எண்ணிப் பெருமைப் படக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்று நமது கழகம் நமக்குச் சொந்தமல்ல — பொதுமக்களுக்குச் சொந்தம். நமக்குக் கோளாறு என்றால் வீட்டுக்குவீடு இன்று அழுகுரல் கேட்கிறது! இவர்கள் நம் கட்சி என்று இன்றைக்குத்தானே தெரிகிறது. என்கிற அளவுக்கு நாட்டுக் கட்சியாகவும், வீட்டுக் கட்சியாகவும் நமது கழகம் வளர்ந்துவிட்டது. பெரும் பூகம்பம் எழும்பி உலகமே அழிந்தாலொழிய வேறு எவராலும் நமது இயக்கத்தை அழிக்கமுடியாது. நமது கொடிக் கம்பத்தை அசைக்க உலகத்தில் யாருக்கும் திராணியில்லை. ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் இதை உணராமலில்லை—நேற்று வரை, உணராதவர்கள் இன்று உணர்ந்திருப்பார்கள் — மிகுதிப் பேர் நாளை உணருவார்கள்! *

நேரடி வரி விதிப்பு

ஸ்வீடன்	57.8	சதவிகிதம்
நார்வே	46.7	,,
இங்கிலாந்து	38.4	,
ஆஸ்டிரியா	35.3	,,
மே. ஜெர்மனி	26.8	,
இந்தியா	21	,,

வருகிறார்கள், வல்லாளர்கள்!

வட அரசே எதிரி! மக்களல்ல

அடையாள மறியல் ஏன்?

"புதியதோர் உற்சாகம் பூண்டு செல்லும் நீங்கள் அடுத்து வரும் தேர்தலில் இவ்வளவு பெரிய அணிவகுப்புள்ள கட்சி ஏராளமான வாக்குகளைப்பெற்றது என்று காட்ட வேண்டும்! அப்போதுதான் உலகம் நம்மைப்பற்றி உணரும். ஊராள்வோரும். நமது குரலின் சக்தியை அறிவார்கள். அதற்கான பணியில், நமது ஆர்வமும் உழைப்பும் பயன்பட வேண்டும்'' என்று இலட்சோபலட்சம் மக்கள் திரண்டிருந்த மதுரை மாநாட்டில் அண்ணா அவர்கள் எழுப்பிய சிம்மநாதம், என் சிந்தையில் ஒலித்தபடியேயிருக்க, சென்னை வந்தேன்! ஏடுகளைப் புரட்டினேன்! காணாததெல்லாம் கண்டேன்! என்னை வந்து சந்தித்த நண்பர்களும் நான் இது நாள்வரை கேட்டிராத செய்திகளையும் சொன்னார்கள்!! பத்திரிகாலயங்கள்சாதாரணமாக நம்முடைய மாநாடுகள் என்றாலே, அலட்சியமாக இருக்கும். ஆனால், இத்தடவை ஆசிரியப் பெருமக்கள் அதிசிரத்தையோடு வினவினராம்.

"மதுரையிலிருந்து செய்தி வந்ததா? என்ன பேசினார் அண்ணாதுரை? என்னென்ன தீர்மானங்கள் போட்டார்கள்?'' என்று. அனைத்திந்திய வானொலிகூட, மாநாடு பற்றிய செய்திகளைச் சொல்லிற்றாம்! இந்தவார 'ஆனந்த விகடனை'க் கண்டீர்களோ? அடடா! ஆச்சரியத்தில் மூழ்கினேன்! "இந்து'' ஏடு நமக்கென தன்னுடைய 18ந்தேதிய தலையங்கபகுதியை ஒதுக்கியோசனையையும் புத்திகளையும் வழங்கியிருக்கிறது. இந்தளவுக்கு நம்மீது கவனமும் கருத்தும், ஆகாயத்தில் கோட்டைகட்டி வசிப்பது போலிருப்போருக்கு ஏற்பட்டது குறித்து, நாம் மகிழ்வோம்.

* * *

தலையங்கம் தீட்டிய "இந்து'' ஏடு, சில கேள்விகளை எழுப்பியிருக்கிறது. சினம் எனும் பேனா கொண்டு தலையங்கத்தார் எழுதி

அரங்கண்ணல்

யிருக்கிறார் என்றாலும் அவர் கிளப்பியுள்ள சில ஐயங்களுக்கு விடைதர வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. எதையும் விளையாட்டக் கருதக்கூடிய கட்சியல்ல தி. மு. கழகம் மக்களைத் கூர்ந்து கவனிக்கிறார்கள். நாட் திரட்டி அவர்கள் மூலம் செல்வாக்குப்பெற்று, அந்தச் செல்வாக்கைச் செங்காங்கடைக்கு விற்கலாமா, சீர்பெற்ற ஊராள்வோருக்குத் தண்டனிடப் பயன்படுத்தலாமா என்று எண்ணும் கட்சியல்ல, இது. உற்சாகத்தைத் தூண்டிட உரத்த குரலில் நாம் பேசக்கூடும்! அப்படிப்பேசுவது அரங்கத்திற்கு வந்து விமர்சிக்கப்படும் நிலை வந்திருப்பதை நாம் மறக்கவில்லை!!

"எதிர்க்கட்சி எப்போதும் எதிர்க்கட்சியாகவேயிருந்து விடாது. ஆளும்கட்சியாக மாறும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது,'' என்று இதனால் தான் அடிக்கடி அண்ணா அவர்கள் எடுத்துரைத்துவருகிறார். ஏழெட்டாண்டுகளுக்கு முன்பிருந்த நிலைவேறு. இப்போது நாம் ஒரு மாநகராட்சி மன்றத்தையே ஆள்கிறோம்! பல ஊராட்சி மன்றங்களிலும் உட்கார்ந்திருக்கிறோம்!! நமது சொல் காற்றுக் காய்ச்சலாகக் கருதப்பட்ட காலம் வேறு. இன்றுநமது தலைவர்களது வாயிலிருந்து சிந்தும் ஒவ்வொரு சொல்லும் எடை' போடப்படுகிறது. என்ன செய்யப்போகிறார்கள் — என்ன பேசுகிறார்கள்—நிருபரே! போய்ப் பேட்டி கண்டுவாரும்-அப்படியா பேசினார், அதன் நோக்கம் இதுவாகந்தானிருக்கும் என்று யூகங்கள் கணிக்கிறார்கள். நாட்டின் வாழ்க்கையில் நம்முடைய பங்கென்ன என்பதை எல்லோரும் டின் வாழ்க்கையில் பங்கென்ன என்பதை எல்லோரும் கூர்ந்து கவனிக்கிறார்கள். நம்முடைய கழகத்துக்கு தரப்பட வேண்டிய உரிய மதிப்பு தரப்படும் கட்டம் வந்துவிட்டது, வல்லாளர்களுக்கு! புதியதொரு கட்கட்டம்—பூரிப்பு மிகு டம்—எனினும், இந்தக் கூட்டம் மிக மிகப் பொறுப்பானது என்பதை அடிக்கடி நம் தலைவர் நமக்கு அறிவுறுத்துகிறார். காட்டாறெனக் கிளம்பி, கட்டுப்பாடில்லாமல், கழனிகளையும் சோலைகளையும் அழிதது எதற்கும் பயன்படாமற் போன இயக்கங்களின் வரலாறுகளை அறிவார்! இன்று திண்டாடும் பிரான்சு மட்டும், புரட்சியின் போது உண்டான பர பரப்பையும் எழுச்சியையும் சரியான வகையில்பயன்படுத்தியிருக்குமேயானால், அதன் பாதை அப்போதே மாறியிருக்கும். ஆர்வத்துக்கு முதலிடம் கொடுத்த பிரெஞ்சு மக்கள் 'அடுத்தபடி என்ன?' என்பதை நினைக்கமறந்தார்கள்! ஆதிக்கக்காரனை ஒழிப்பதையும் அவன் தலையைச் சீவுவதையும் பெரிதாக எண்ணினார்களே ஒழிய நம்முடைய நாட்டை நாம் எப்படி ஆள்வது என்பதை எண்ணத்தவறினார்கள்!! ஏழைகளும் இல்லாதவர்களும் நிரம்பிய ஒரு சமூகத்தில் எழுச்சிக் கனலை உண்டாக்குவது எளிது. ஆனால் அந்த எழுச்சியை சரியான வழியில் பயன்படுத்தி, அறுவடை செய்வது சுலபமல்ல. அதனாலேயே நம் தலைவர்,

"நமக்குள் நல்லதொரு கட்டுப்பாடு வேண்டும். பல துறைகளிலும் சென்று நமது இயக்கத்துக்குச் சக்திகளையும்யோசனைகளையும்கொணரும் ஆற்றல் மிக்கோர் அதிகம் வேண்டும்'' என்று அறிவுறுத்துகிறார் நமக்கு. இருந்தும் 'இந்து' ஏடு எதிர்க்கட்சிகள் இன்றைக்கில்லாவிடினும் ஒருநாள் ஆளுங்கட்சியாக வரநேரும் என்பதை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும் என்று எழுதியிருக்கிறது!! அதன் புத்திமதிக்கு நன்றி செலுத்துவோமாக. இந்தளவுக்கு நம்மை மதிக்கும் நற்குணம் கொண்டமைக்காக மகிழ்வோமாக. நாய்கள்—சொறிபிடித்த குரங்குகள்—கூச்சல் போடும் கோட்டான்கள்—இவைகளை யார் சீந்துவார்—நாத்தீகப்பதர்கள் என்று கருதப்பட்ட நிலைமாறி, இதுகளும் ஒரு நாளைக்கு அரசாளும்' என்கிற அளவுக்குத் தெளிவும் திடமான எண்ணமும் ஏற்படுவது, சாமான்யமானதா? அல்லவே!!

* * *

பொறுப்பினை நமக்கு உணர்த்த வந்த 'இந்து' ஏடு வழங்கிய புத்திமதிகளில் முக்கியமான ஒன்று; திராவிடர் கூட்டாட்சி என்பதை நாம் விட்டுவிட வேண்டும்; அது சாத்தியமில்லாதது, என்பதாகும். நாம் கேட்பது திராவிட நாடு! திர விட நாடு என்பதற்கும் 'திராவிட(ர்) பெடரேஷன்' என்பதற்கும் வேற்றுமையுண்டு 'திராவிடர்' என்று இன பேதத்தைக் காட்டி நம் நாடு கோரும் கருத்தில், அது எழுதியிருக்கிறது. யூத இனத்தை விரட்டிய நாஜிகளைப் போன்றவர்களல்ல நாம்! நாம் யாரையும் விரட்டவோ வங்காளக்குடாக் கடலில் தள்ளவோ, விரும்பவில்லை. மதம், இனபேதங்களுக்காக எவரையும் விரட்டி விடுவோம் என்றும் சொல்லவில்லை. அது இந்த நூற்றாண்டின் நாகரீக சமுதாயம் ஏற்றுக் கொள்ளாத ஒன்று என்பதை நமது தலைவர் நன்றாக அறிவார். ஒன்றே குலம்!—எனும் உயரிய கோட்பாட்டினைக் கொண்ட அவர் உள்ளமா, இன்னொரு உயிரை வதைப்படுத்த நினைக்கும்? எனினும் 'இந்து' ஏடு நமது கழக இலட்சியத்தை, பேதப் பொருள்பட எழுதியிருக்கிறது!

இவ்வளவு பெரிய அரசியல் விழிப்பு பெற்ற ஒரு இயக்கத்தைப் பற்றி மேதைகள் நிரம்பிய 'இந்து'வின் கூட்டம் இன்னும் சரியாகத் தெரிந்துகொள்ளாதது, மிக மிக வெட்கக்கேடுதான்!! 'தென்னாட்டு ராஜ்யங்களடங்கிய திராவிடர் கூட்டாட்சி கேட்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். ச த்திரத்தை துவேஷக் கண் கொண்டு படித்துப் பெற்ற இந்த சித்தாந்தத்தின் எதிரொலி தமிழ் நாட்டுக்கு வெளியில் எங்கும் கேட்கவில்லை''—என்றும் எழுதியிருக்கிறது. தமிழ் நாட்டுக்கு வெளியில் எங்கும் கேட்கவில்லை!- இதில்கூட 'இந்து' தவறுகிறது; தமிழ் நாட்டுக்கு வெளியில் வளரவில்லை, என்பதை நாம் ஒத்துக் கொள்றோம். உண்மையை ஒப்புக் கொள்வதில் வெட்கமுமில்லை! வேதனையுமில்லை!! இப்படி வளராத காரணத்தாலேயே, என்றைக்கும் வளர முடியாது என்று யார்தான் கூற முடியும்? தமிழ் நாட்டில் மட்டும், நம் குரல் வளரும் என யார் வாழ்த்திச் சொன்னவர்கள்? ஆதரவு நல்க யாரும் முன்வந்ததில்லையே, நமக்கு! இருந்தும் இங்கே வளர்ந்தது போல், அங்கும் வளர முடியாது என்று யார் கணிக்க முடியும்? அதிலும், குரல் ஒலிக்காவிட்டால் கூட அஞ்சலாம்—ஒரு ஆள்கூட இல்லையே — ஒப்பக்கூடியவர்கள் உண்டா, என்று. குரலொலி கிளப்ப பலர் உருவாகிவருகிறார்களே, பார்த்தோமே மாநாட்டில்!!

ஒரு மேடப்பா வந்ததுபோல், இனனும் பலர், வரமாட்டார்கள் என்று அடித்துச் சொல்ல முடியுமா அரசியலில்? 'வளர முடியாது' என்பதற்கு 'இந்து' எடுத்துக் காட்டும் ஆதாரங்கள்தான் என்ன? ஆசையின் பிரதிபலிப்பு என்று வேண்டுமானால் சொல்லலாம்! அதேபோல 'வளரும்' என்கிற ஆசை நமக்கு, இருக்கலாமல்லவா!! இரண்டு பேருடைய ஆசையில் எது வெல்லும் என்பதைச் சொல்லக்கூடியது எதிர்காலமே தவிர, இப்போதே இது நடக்காது—முடியாது—ஆகாது-என்று சபித்திட இவர்கள் என்ன புராண காலத்து முனிபுங்கவர்களா? அப்படிப்பட்ட முனிபுங்கவர்கள் சாபத்துக்கே விளக்கமும் விமர்சனமும் செய்யப்படுகிற காலமாயிற்றே, இது! ஆகவே, 'வளரமுடியாது' என்று யாரும் வாதாட முடியாது. வேண்டுமானால், அதனால் நல்லதா—கெட்டதா என்று கேட்கலாம்.

நாம் திடமாக நம்புகிறோம். இந்த நான்கு மாநிலப்பகுதிகளும் தங்கள் பகுதிகளைத் தாங்களே ஆண்டு கொண்டு முக்கியமான பொதுப் பிரச்னைகளை ஒரு கூட்டமைப்பு மூலம் ஆண்டுக்கொள்வது நல்லது என்று!! இப்படி நாம் நம்புவதை ஏற்றுக் கொள்

9-ம் பக்கம் பார்க்க

தமிழை- தமிழ்க் கலையை- தமிழகத்தை- காக்க...

எமைவிட யாருண்டு?

அவைத் தலைவர், நாவலர், மாநாட்டில் ஆற்றிய முழு உரை.

"நாம் இந்த நாட்டை விடுவிக்கின்ற அரும்பெரும் பணியிலே ஈடுபட்டிருக்கிறோம். அதை வெளிப்படுத்தவும், பிறருடைய கண்களையும் கருத்துக்களையும் ஈர்க்கவும், வரலாற்றுச் சான்றுகளையும் வேறு பலவற்றையும் எடுத்து வைத்துநம்முடைய இலட்சியத்துக்காக வாதாடும் பணியிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம். இதனைக் கேட்டுத் தெளிவுறும்மக்களும் நம் பக்கம் வருவதைக் கண்டு வருகிறோம்.

திராவிட முன்னேற்றக்கழகத்தின் விடுதலை வேட்கைக்கு உறுதுணை மொழி வழி, இனவழியில்தான். மொழிவழி பிரிந்து இனவழி அடிப்படையில் ஒன்றுசேரும் திராவிடச் சமதர்ம குடியரசுக் கூட்டாட்சிதான் நாம்கோருவதுகாலம் ஒன்று இருந்தது—வேலும்வாளும் ஈட்டியும் கத்தியும் ஒரு நாட்டினுடைய எல்லையை வரையறுத்துக் கொண்டிருந்தன. ஜூலியஸ் சீசர் காலத்திலேயும் அலெக்சாண்டர் காலத்திலேயும், அசோகன் காலத்திலேயும், கரிகால் சோழன் காலத்திலேயும், சேரன் செங்குட்டுவன் காலத்திலேயும், படைப்பலம் ஒருஆட்சியினுடைய எல்லையை நிர்ணயித்துக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு அறிவு வளர, வளர இப்படிப்படை பலத்தால், ஆக்கிரமிப்பால் ஒரு நாட்டினுடைய எல்லையை அகற்றவோ அடையவோ முயலக்கூடாது; எல்லாக் கருவிகளையும் விட மேலானது மொழிதான் என்று எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்! பரம்பரைப் பாத்தியதையோ, படை பலமோ ஒரு காலத்திலே ஆண்டோம் என்கிற உரையோ, அல்ல!! அதனால்தான் நாமும், தமிழகத்தைஆந்திரத்தை கேரளத்தை. கருநாடகத்தை உருவாக்குகிற ஒரு பணியிலே ஈடுபட்டிருக்கிறோம்மொழிவழிதனித்தனி மாநிலங்களாக அமைந்து இன வழி ஒன்றுபட்டஒரு கூட்டாட்சி அமைப்பதுதான்நமதுகுறிக்கோள் தமிழ்மொழியைக் காக்க, தமிழக அரசின் வரிபணத்தைப் பாதுகாக்க தமிழ்க் கலையைக் காக்க' நாம் உரிமைக்காக தமிழக அரசு கேட்கிறோம், அதே உரிமைக்காக ஆந்திரர், ஆந்திரம் கேட்கின்றனர்—மலையாளிகள் அவர்கள் உரிமையுடன் வாழவேண்டுமென்பதற்காக கேரள அரசு கேட்கின்றோம்—அதேபோல கன்னட மக்கள் அவர்கள் உரிமைகளைப் பெறுவதற்காகக் கர்நாடக அரசும் கேட்கிறோம், உரிமைக்காக தமிழ் மாநில அரசு உறவுக்காகதிராவிட கூட்டாட்சி—நட்புக்காக நாம் ஐக்கிய நாடுகள் சபையில் இடம் கேட்கிறோம்.

உரிமைக்கு தமிழக மக்களுக்கு தமிழகம். உரிமைக்கு ஆந்திரர்ளுக்கு ஆந்திரம். உரிமைக்கு கன்னடியர்களுக்கு கன்னடம். உரிமைக்கு மலையாளிகளுக்கு கேரளம், மொழி வழி தமிழகத்தையும் இனவழி திராவிடத்தையும் கேட்கிறோம்.

தமிழக ஆந்திர கேரள கர்நாடகம் நான்கும் சேர்ந்ததுதான் திராவிடத் தேசியம்.

நாம் தமிழ் மொழியை பேசுகிறவர்கள். மொழி வேட்கையை உடையவர்கள். தமிழ் உணர்ச்சியைக் கொண்டவர்கள். நம்மிடத்தில் தமிழ் வேட்கை—தமிழ் உணர்ச்சி மிகுந்திருக்கும்.

தமிழை—தமிழக மக்களை—தமிழ் இலக்கியத்தை—தமிழ் கலையை—தமிழ்ப் பண்பாட்டை காப்பாற்றுவது திராவிட முன்னேற்றக் கழகத்தை தவிர வேறு எவரும் இல்லை

எந்தக் கட்சியிலிருப்பவர்களையும்விடதிராவிடமுன்னேற்றக்கழகத்தாருக்கு ஒரு கடுகளவும் குறையவில்லை — குறைந்தவர் வர்களல்ல.

நம்மைவிட தமிழை தமிழக மக்களை காப்பாற்றுபவர்களை போலவும்—கலையை பண்பை நம்மால் வாழ வைக்க முடியாதது போலவும்—வாழ வைக்கும்திறன் வக்கு வகைகள் அவர்களிடம் இருப்பது போலவும் தாங்கள் தான் தமிழ் நாட்டை—தமிழ் மக்களை—தமிழ் வரிப் பணத்தை—தமிழர் பண்பாட்டை காப்பாற்றும்திறமைபெற்றவர்களைபபோலவும் பேசுபவர்களுக்கு கடுகளவு—எள்ளளவு குறைந்தவர்களல்ல நானும் அன்பழகனும், கருணாநிதியும், மதியழகனும், நடராசனும், ராஜேந்திரனும, ராமச்சந்திரனும் இன்னும் நீங்கள் பார்க்கும் மற்றவர்கள் எல்லோரும்.

நாம் தமிழரைவிட தமிழரசுக் கழகத்தைவிட—பொதுவுடைமைக்காரர்களைவிட — பிரஜா சோஷலிஸ்டுகளைவிட இன்னும் பல புதிய கட்சிகளைவிட எள்ளவும் குறைந்தவர்களல்ல நாங்கள் அவர்கள் தமிழகத்தை வாழ வைக்க கொண்டிருக்கும் திட்டத்தைவிட மீறிய திட்டத்தைவைத்திருக்கிறோம் நாம்.

தமிழ்நாடு தனியாக வாழ முடியாதா என்று கேட்டால், வாழ முடியும். மூன்றரை கோடி மக்களைக் கொண்ட தமிழ்நாடு ஏன் தனி நாடாக வாழ முடியாது. இதைவிட சுண்டைக்காய் நாடுகள் பலப்பல வாழ்கின்றன. பக்கத்திலே இருக்கிற பர்மா 2கோடி மக்களை வைத்துக்கொண்டுவாழ்கிறது. மலாயா ஒன்றரைகோடி மக்களை வைத்துக் கொண்டு வாழ்கிறது. காலடியிலிருக்கும் சிலோன் 89லட்சம்மக்கள் சிங்கப்பூர் 12 லட்சம்மக்கள் லெபனுன் பனிரெண்டரை லட்சம்மக்கள்லக்ஸம்பர்க் 3 லட்சம் மக்கள். மொராக்கோ 21 ஆயிரம் மக்களைக்கொண்டு தனிநாடாக வாழ முடிகிறது.

5400 மக்களை கொண்டிருக்கிற—ஐக்கியநாடுகள் சபையில் உறுப்பினராகியுள்ள வாடிகன் ஸிட்டி போன்றஅவைகள்வாழும் போதுதமிழ்நாடுதனிநாடாக வாழ முடியாதாஎன்றால்முடியும் அப்படியிருந்தும் திராவிடக் கூட்டாட்சி கேட்கிறோமென்றால், தமிழ் நாடாக தனித்திருக்கும்போது எவ்வளவு நன்மைகள் உண்டோ அவ்வளவு நன்மைகள் திராவிடக் கூட்டாட்சியிலும் உண்டு பிளஸ்—அதிலே கிடைக்காத நன்மைகள் இதிலே உண்டு! தமிழகம் மட்டும் தனியாக இருந்து தனி வுரிமையுடன் வாழ்வதிலே உள்ள நன்மைகள் அத்தனையும் இதிலே உண்டு.

அதோடுகூட அவர்கள் கேட்பதிலே இல்லாத நன்மைகளும் இதிலே உண்டு. சிலபேர் கேட்கிறார்கள். அந்த நான்கு மட்டும் ஏன் தனியாக வாழ வேண்டும், இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள 17 நாடுகளும் ஒன்றாக இருந்தாலென்ன? நல்லதல்லவா? அந்த பதினேழு மட்டும ஒன்றாக இருப்பதைவிட ஆசியாக்கண்டத்திலே உள்ள எல்லா நாடுகளும் ஒன்றாக இருந்தாலென்ன? 5 கண்டமும் ஒன்றாக இருந்து அகில உலக பண்டித நேருவே பிரதமராக இருந்தாலென்ன? இருக்க முடியாதா? அவருடைய புகழ் பெருமைக்கு ஒத்துவராதா? என்று கேட்டால் வரும்.

என் இந்த நான்கும் கேட்கிறோமென்றால் நான்கு மாலநித்தவரும் ஒரு இனவழி வந்தநாடுகள். நான்குக்குமிருக்கிற ஒற்றுமைள் இனவழியால் — மொழியால் — பண்பாட்டால்இசையால், சிற்பக்கலையால் வாணிபத்தால்—நாகரீகத்தால்—கொள்கையால்- கொடுப்பினால் மலையால்,ஆற்றுத்தொடர்பால், வரலாற்றுத் தொடர்பால் இருக்கின்ற இனவழி அடிப்படையில் அமைந்த நாட்டைத்தான் கேட்கிறோம்.

மாடப்புறு-மணிப்புறு வல்லூறு எல்லாம் பறவைகள்தான். தமிழ் நாட்டான், கன்னடத்தான், வட நாட்டான், அத்தனைபேரும் மனிதர்கள்தான்.

ஆனால் மாடப்புறுவும் மணிப்புறுவும் ஒரு பிரிவைச் சேர்ந்த பல

"...திரு நெடுஞ்செழியன் அவர்கள் 'மொழியும் வழியும் என்ற தலைப்பில் நிகழ்த்திய உரை குறிப்பிடத் தக்கது. அவர் உரையில் நகைச்சுவையும் பொருட் சுவையும் போட்டிபோட்டுக் கொண்டு முன்வந்தன..."

'ஆனந்தவிகடன்' இதழில்

'மணியன்'

தமிழகம் + மேலும் சில நன்மைகள் : திராவிட நாடு!

தென்னகம் ஒரே கூடு!!

பெரியார் விட்டால் என்ன?

நேருவுக்குப் பிறகு!!

நாவலர் முழக்கம்

வைகள். வல்லூறும் பறவை தான். ஆனல் அது வேறு பிரிவைச் சேர்ந்தது.

தமிழன் தெலுங்கன்கன்னடத் தான் ஒரு பிரிவைச் சேர்ந்தவா கள். வடநாட்டான் வல்லூரைப் போன்று வேறு பிரிவைச் சேர்ந் தவன்!

மாடப்புருவுக்கும் மணிப்புரு வுக்கும் உள்ள ஒற்றுமைகள் ஏராளம், வேற்றுமைகள் மிக மிகக் குறைவு. மாடப்புருவுக்கும் —வல்லூறுக்கும் இருக்கிற வேற் றுமைகள் ஏராளம். ஒற்றுமை கள் மிக மிகக் குறைவு.

மாடப்புருவுக்கும் மணிப்புரு வுக்கும் உள்ள உணவு வகையே வேறு. மாடப்புருவும் மணிப்புரு வும் பட்டாணிக்கடலே, பொட்டுக் கடலே, நெல்லைக் கொரிக்கும். ஆனல் வல்லூறு பிணத்தைக் கொத்தும், இவைகள் உணவு வகைகளே வேறு.

தமிழ்நாட்டான், கன்னடத் தான், தெலுங்கன் ஆகிய நால் வரும் அரிசிச் சோற்றில் வாழ்ப வர்கள். வடநாட்டான் கோது மையில் வாழ வேண்டிய இனம்.

இது அரிசிப் பகுதி—அது கோதுமைப்பகுதி. தமிழன், கேர ளத்தான், கன்னடத்தான் தெலுங்கன் ஆகியநாலுபேருக்கு சாமபார், ரசம, மோர், பொரியல், ஊறுகாய், கூட்டு வருவல் இது தான் டைநாட்டானுக்குபூரிச்சப் பாத்தி உருளைகிழங்கு இதுதான்.

தமிழ், தெலுங்கு, கர்நாடகம், மலேயாளம் ஆகிய நால்வருக்கும் இசை கர்நாடக இசைதான்.

அட்டாணவும் முகாரியும்-காம்போதியும் தெலுங்கனுக்கும் புரியும்- கேரளத்தானுக்கும் - புரி யும் தெலுங்கு நாட்டிலே பாடிய தியாகராஜர் கீர்த்தனைதான் தமிழ்நாட்டிலே இருக்கிற அரியக் குடி ராமானுஜயங்காரும், மதுரை மணி அய்யரும் சுந்தராம்பாள் அம்மையாரும், சுப்புலட்சுமி அம் மையாரும் பாடிக் கொண்டிருக் கிருர்கள். தமிழகத்தை சேர்ந்த சுப்புலட்சுமி அம்மையாருக்கு கர் நாடகத்தினல் பெருமை. வட நாட்டான் இசை இந்துஸ்தான் இசை. இந்துஸ்தான்' இசைக் கும்-காம்போதிக்கும் ஒட்டி வராது அது அடியோடு வேறு,

சிற்பக் கலேயிலும் ஒன்று பட் டதுதான் — திராவிட நாட்டுச் சிற்பக்கலே தமிழ்நாட்டிலே உள்ள திருப்பரங்குன்றத்தில் இருக்கும் கோயிலின் கலேயழகு என் னவோ அதுதான். திருச்சியில் உள்ள கோயிலும் 'திருவாரூரில் உள்ள கோவிலிலும் — உள்ள சிற்பகலேதான் கேரளத்தி லிருக்கிற பத்மநாபசுவாமியின் கோபுரமும்; குருவாயூரப்பன் ஆலயமும், திருச்சூர் கோபுர மும்—மைசூர், பெங்களூர், கொள்ளேகாலம் - ஆகிய இடங்களிலும் இதுதான் திராவிட சிற்பக் கலே.

இதைத் தாண்டி வடக்கேச் சென்ருல் பர்சிய நாட்டு சிற்பக் கலே. அரரபிய நாட்டு இரவல் சிற்பக் கலே.

உண்டைக்கட்டி பிள்ளையார் கோவில் போல்தான் காசி விஸ்வநாதர் கோயில் இருக்கும்.

மொழி அடிப்படையை எடுத் துக்கொண்டீர்களேயானல், தமிழ் தெலுங்கு, கன்னடம், மலேயா ளம் நான்கும் ஒன்று என்பதை நான் பல கூட்டங்களில் எடுத் துக் கூறியதைப்போல் விளக்கிய தைப்போல் மீண்டும் விளக்கிச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் கன்னடம் மலேயாளம் இனத்தின் வழிவந்த மொழிகள் —திராவிடக்குடி மொழிகள்.

வடநாட்டு மொழி அடிப்படை அமைப்பே வேறு நம் மொழியின் அடிப்படை அமைப்பே வேறு. சமஸ்கிருத மயமாகாதது தமிழ்——சமஸ்கிருத மயமான தமிழ்தான்—தெலுங்கு — சமஸ் கிருதமான தமிழ்தான் மலேயா ளம் — சமஸ்கிருதமான தமிழ் தான் கன்னடம். மலேயாளம், கன்னடம் தெலுங்கு மொழிக லில் அருமை நண்பர்கள் இங்கே பேசினர்கள். நீங்கள் எல்லோரும் மொழி பெயர்க்க வேண்டிய அளவு இல்லாது சுலப மாகப் புரிந்து கொண்டீர்கள்.

அவர்கள் பேசிய தெலுங்கு முழுவதும் புரிந்து கொள்ளமுடி யாவிட்டாலும் அறுபது, எழுபது தெலுங்கு வார்த்தைகள் நம்மால் புரிந்து கொள்ளுமளவு இருந் தது. அவர்கள் பேசிய கன்ன டம் முழுவதையும் புரிந்து கொள்ள முடியா விட்டாலும் அறுபது எழுபது வார்த்தைகள் புரிந்து கொள்ளமுடிகிறது. அவர்கள் பேசிய மலேயாளத்தை முழுவதும் புரியாவிட்டாலும் ஒரு 75 வார்த்தைகளாவது புரிந்தது தமிழிலிருக்கிற கசடதபற தள்ளி ஞஙணநமன வைச் சேர்த்து மூக்கை அடைத்துக் கொண்டு பேசினல் போதும் தானக மலே யாளம் வந்துவிடும்.

அதேமாதிரி உதாரணத்திற்கு நான் ஒன்று சொல்கிறேன். சாதாரணமாக மனிதன் ஆரம்ப காலத்திலே மின்சார விளக்குகளுக்கும், வான ஊர்திக் கும். வானெலிக்கும், சொற் களைக் கண்டுபிடித்திருக்கமாட் டான். தலே. கை, கால், மூக்கு, ஆடு, மாடு, நிலா, வான், கடல்— இவைகளுக்குத்தான், சொற்கள் கண்டுபிடித்திருக்க முடியும். இந்த அடிப்படையை வைத்து கொண்டு 'தலே' என்கிற சொல்லே எடுத்துப் பார்த்தால் தமிழிலே தலே என்கிருேம், தெலுங்கிலே தலா என்கிருன், கன்னடத்தான் தலே, என்கி ருன், மலேயாளத்தில் தலே என்கி ருர்கள். ஆங்கிலத்திலே கேட் டால் 'ஹெட்' என்கிருன்! ஏனென்ருல், அவன், அங்கியன் அவனுக்கும் நமக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லே. அதனல் 'ஹெட்'டுக்கும் 'தலே'க்குமிடை யிலே, பெரிய வித்தியாசம் இருக்கிறது. வடநாட்டானைக்கேட் டால் 'சிர்ரு' என்கிருன்! எப்படி 'ஹெட்' என்கிற ஆங்கிலேயன் அங்கியனே அதேபோல 'சிர்ரு' என்கிற வடநாட்டானும் நமக்கு அங்கியன்தான்! என்ன வித்தி யாசம் என்ருல் அவன் அய்யா யிரம் மைலுக்கு அப்பாலிருக்கி ருன்—இவன் ஆயிரம் மைலுக் குள்ளிருக்கிருன். எப்படி நானூறு மைலுக்கு அப்பாலிருக் கிற சிங்களன நமக்கு அங்கி யனே, அதேபோல, ஆயிரம் மைலுக்கு அப்பாலுள்ள வடநாட் டானும் நமக்கு அங்கியன்தான்! கண்ணை எடுத்துக் கொண்டால் கண்—கன்னு—கண் — கண் தான் தமிழன்; கன்னடியன், மலேயாளி, தெலுங்குக் காரர்கள் சொல்வது! ஆங்கிலேயனுக்கு, "ஐ யிஸ்"! வட நாட்டோனே 'ஆங்க்'என்ருன்! தமிழில் -ஒன்று தெலுங்கில் கடி கன்னடத்தான் என்னு — மலேயாளத்தான் ஒண்ணு. வடநாட்டானைக் கேட்டால் 'ஏக்' என்கிருன்! நமக்கு எப்படி எழுவாய், பய னிலே, செயப்படு பொருளோ, இதே போலத்தான் தெலுங்குக் குக்கும், மலேயாளத்துக்கும், கன்னடத்துக்கும் ஆனல், வட நாட்டுக்காரனுக்கு; அப்படியல்ல. இங்கே வாழுகின்ற அத்தனைத் தெலுங்குச் செட்டியார்களும் தெலுங்கின் வழிவந்தத் தமிழ ரான பரம்பரை, இராசபாளையத் திலிருக்கிற ராசாக்கள் அத்தனை பேரும் தெலுங்கின் வழிவந்த தமிழனை பரம்பரை. இங்கே முதலமைச்சராயிருந்த குமார சாமி ராசா தெலுங்கின் வழி வந்த தமிழனை பரம்பரை. முதல் மந்திரியாயிருந்த ஓமந் தூர் ராமசாமி ரெட்டியார். தெலுங்கின் வழிவந்து தமிழ னைப் பரம்பரை. எம். ஜி. இராமச்சந்திரன், மலேயாளி வழிவந்து தமிழனை பரம்பரை. மனேகரன், மலேயாளி வழி வந்து தமிழனை பரம்பரை. டி. வி. நாராயணசாமி தெலுங் கின் வழிவந்து, தமிழனை பரம் பரை. சி. பி. சிற்றரசு தெலுங் கர் வழிவந்து தமிழனை பரம் பரை. மேயர் முனுசாமி தெலுங் கின் வழிவந்து தமிழனை பரம்பரை. அனந்தசயனம் அய்யங்கார், தமிழன் வழிவந்து தெலுங்கனனவர். சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் தமிழன்வழி வந்து தெலுங்கனை பரம்பரை. கேரளத்திலிருக்கிறகிருஷ்ணய்யர் தமிழர் வழிவந்து மலேயாளியான வர். பெரியார் ராமசாமி கன்னடி யர் வழிவந்து தமிழனனவர். திருவனந்தபுரத்திலே நூற்றுக்கு முப்பதுபேர் தமிழர்களைக் காண முடிகிறது; பெங்களூரிலே நாற் பது பேர் தமிழர்கள்திருப்பதியிலே பாதிக்குமேல் தமிழர்கள். இப் படி இருக்கிருேம், நாம். குஜ ராத்திவழி வந்து தமிழனனவர் கள் யாராவது உண்டா? வங் காளி வழிவந்து தமிழனனவர் கள் உண்டா? தமிழ்—தெலுங்கு — கன்னடம் — மலேயாளம் இந்த நான்கு இடத்திலும் வேறு எதனிடத்திலும் இல்லாத ஒட்டு உறவு அதனல்தான் மொழி வழியால் இனவழியால் ஒன்று சேரவிரும்புகிருேம்.

பறம்பிக்குளம் தண்ணீர் தர கேரள சர்க்கார் மறுக்கிருர்களே கிருஷ்ணுவிலும் கோதாவரியிலும் வீணுகிற தண்ணீரைத் தர ஆந்திர சர்க்கார் மறுக்கிருர் களே; நீங்கள் திராவிட்நாடு கேட்டால் எப்படி கிடைக்கும்? என்கிருர்கள். நண்பர்களே! நாம் அதற்காகத்தானே திரா விடநாடு கேட்கிருேம். இன் றைக்கு அமைந்திருக்கிற அகில இந்திய தேசீய ஆட்சி யின் கீழ், இதெல்லாம் கிடைக்க முடியாது! ஏனென்ருல் இதற் கான பிரச்சினைகளை பட்டம் தாணுவோ, சஞ்சீவையாவோ ஜெட்டியோ, காமராசரோ உட் கார்ந்து தீர்த்துவிடமுடியாது. ஏனென்ருல், இவர்கள் எல்லா ருக்குமே எசமானன், இன்றையதினம் டில்லி! அந்த டில்லியின் தயவின்றி, வடநாட் டுக் காவடி தூக்கினலன்றி, இன்றையதினம் எதுவும் செய்ய முடியாது இவர்களால். நான்கு பேரும் வரிகளைக் கொடுக்கிருேம். நான்குபேருந்திருவோடுஎடுத்துக் கொண்டேயிருக்கிருேம். நாம் நான்குபேருக்கும் நமக்குள் ஒரு உடன்பாட்டுக்கு வர டில்லியின் தயவில்லாமல்முடியாது. இப்போ துள்ள நிலேமையில் நிச்சயம்இது நடக்காது! அதனல்தான் நாம், வடவர் தொடர்பை அறுத்துக் கொண்டு, நம்முடைய பிரச்சினை களை நாமே கூடிப் பேசிக் கொள்ளும்படியான ஒரு கூட் டாட்சியைக் கேட்கிருேம். அதைத் திராவிடக் கூட்டாட்சி என்கிருேம்! இப்போது இருக்கிற ஆட்சி முறைப்படி தெலுங்கு அரசு, கன்னட அரசு, தமிழக அரசு மூன்றும் பட்டம்தாணுவை மதிக்க வேண்டிய அவசிய மில்லே...காமராசர் ஜெட்டியை மதிக்க வேண்டிய அவசியமில்லே ஜெட்டி, சஞ்சீவையாவை மதிக்க வேண்டியதில்லே. எல்லோருக்கும் பெரிய இடம் டில்லி! காவடி தூக்க வேண்டிய இடம் டில்லி! தவம் கிடக்க வேணடிய இடம் டில்லி! — ஒப்பந்தம் செய்து கொள்ளவோ இந்த நான்கு அரசுக்குள்ளும் முடியாது. உதா ரணத்துக்கு ஒன்று நான் சொல் கிறேன்; பதினயிரம் ரூபாயை வைத்துவிட்டு ஒரு தந்தை இறந்து விடுகிருன் என்று வைத் துக் கொள்ளுங்கள். இறக்கும் தருவாயில் பக்கத்து வீட்டுக் காரனைக கூப்பிட்டு, பையன் களுக்கு வயது வரவில்லே, பதின யிரம் ரூபாயும் உன்னிடம் இருக் கட்டும் என்று சொல்லிப்போய் விடுகிருன். இந்தப் பதினயிர மும் பக்கத்து வீட்டுக்காரனிடம் இருக்கும் வரையில் அண்ணன் தம்பியை மதிக்கமாட்டான். காலண வேண்டுமானலும் தம்பி அடுத்த வீட்டுக்காரனைப்போய் கேட்க வேண்டும், அரையண வேண்டுமாலும் அண்ணன் அடுத்த வீட்டுக்காரனைப் போய்க் கேட்க வேண்டும், ஒருத்தருக் கொருவர் தெரியாமல் போய்விட் டால் அடுத்த வீட்டுக்காரன், கொஞ்சம் முதுகைப் பிடித்துவிடு என்பான். அண்ணனைக் கேட்டு வா என்று தம்பிக்கும், தம்பிக்குத் தெரிந்தால் கோபிப்பானே என்று அண்ணனிடமும் சொல்லுவான். அதற்குப் பதில் இரண்டு பேருமே சேர்ந்து போய்க்கேட்டு அந்தப் பதினயிரத்தையும் பங்கு போட்டுக் கொண்டால், ஒரு சம யத்தில் என்னடா தம்பி எனக்கு முன்னூறு ரூபாய் வேண்டுமே என்ருல் தம்பி அண்ணனுக்குக் கொடுப்பான்—ஐந்நூறு ரூபாய் வேண்டுமே அண்ண என்றுதம்பி கேட்டால் அண்ணன் கொடுப் பான்.

அதைப்போல, திராவிடக் கூட் டாட்சியில், ஆந்திரா கேரள கன் னட தமிழகம் நான்கும் தனித் தனியாக அமைந்து—சமத்துவ அடிப்படையில் பிரிந்துபோகிற உரிமையோடு கூடிய கூட்டாட்சி அமைந்தால், காமராசர் பட்டம் தாணுவிடம் கலந்து பேசலாம்!

என்னங்க, கொஞ்சம் தண்ணி வேணுங்க என்று இவர் கேட்க ஆமாங்க எனக்குக்கூடக் கொஞ் சம் அரிசி வேணும் என்று பட்டம் தாணு சொல்ல—வீண உங்க ளுக்குப் பயன்படாமெ அராபிக் கடலிலே போய் தண்ணி வீண குதே, 1893 ஆண்டு பெரியாற் றில் வெள்ளைக்காரன் குடைவு ஒன்றின் காரணமாகத்தானே அந்தத் தண்ணீர் வருகிறது— அதுபோல இன்னும் குடைவுகள் போட்டால் மதுரை, இராமநாத புரத்துக்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கும்; அதற்குப் பதில் உங்களுக்கு இவ்வளவு அரிசிதரு கிருேம் என்று இவர் சொன்னல் இரண்டும் எவ்வளவு சுமுகமாக நடக்கும்!! இப்போதுஎன்ன நடக் கிறதென்ருல், தமிழ்நாட்டு அரி சியை வாங்கி டில்லி கொடுக் கிறது. ஆனல், கேரளத் தண் ணீரை வாங்கித் தரத் தயங்கு கிறது. ஏனெனில், கேரளம் கம் யூனிஸ்டுகள்கைக்குப்போய்விடக் கூடாதாம்! அதுக்காக, டில்லி, சலுகை காட்டிக்கொண்டே இருக்கணுமாம். அப்போதுதான், அது, கம்யூனிஸ் கொள்கைக்குப் போகாதாம். நம்ப கையிலே யிருக்கிற அரிசியைப் பிடுங்கிக் கொடுத்துட்டு, "கோவிச்சுக் காதே! நீ என்றென்றைக்கும் காங்கிரசையே ஆதரிச்சா, உன் தண்ணியை வாங்கிக் கொடுக் காமெ, நான் உனக்கு அரிசி கொடுத்துக்கிட்டே யிருப்பேன்", என்று சொல்கிறது டில்லி. வட் அரசு தலேயீடு இல்லேயென்ருல், தென் ஆற்காட் மணிலாக்கொட் டையைக் கொடுத்துட்டு மைசூர் சந்தணக் கட்டையை வாங்கிக் கொள்ளலாம்! சஞ்சீவையா வைக் கேட்டு குண்டூர்ப் புகை யிலேத் திண்டுக்கல் சுருட்டுக்குத் தேவையென்று பெற்றுக்கொள் ளலாம்!! இதைப்பற்றியெல்லாம் நாம் எடுத்துரைக்கும்போதுதான் தேசீயம்—இந்திய தேசீயம் பேசு கிருர்கள். அதைப் பற்றி நாம் கவலே கொள்ளத் தேவையில்லே.

சில பேர் கேட்கிருர்கள் "பெரி யார் ராமசாமியே திராவிடநாடு தேவையில்லே யென்று சொல்லி விட்டாரே? நீங்கள் கேட்கிறீர் களே!" என்கிருர்கள். நானே அல்லது அண்ணவோ திராவிட ரியக்கத்திலே சேர்ந்தோம், திரா விட கழகத்திலே இருந்தோம் என்ருல், பெரியார் ராமசாமிக் காகவா சேர்ந்தோம்? அவர் போகிற வழியிலேயே போய்க் கொண்டிருக்கவா செய்வோம்? அவர் எங்கெங்கு போகிருரோ, அங்கே போக; அவர் என் னென்ன சொல்கிருரோ, அதைச் சொல்ல; அவர் எதை எதைச் செய்கிருரோ அதைச் செய்யவா, சேர்ந்தோம்? ஒரு எசமானனுக் குச்சேர்ந்தவேலேக்காரன்என்ருல் மதுரையிலிருந்து திண்டுக்கல் லுக்கு எசமானனை மாற்றினல், உடன் அவன் கூடச் செல்லு வான். அப்படி அந்த வேலேக் காரன் போகாமல் இங்கே எங்கே யாவது உலவிக் கொண்டிருந் தால், "என்னப்பா! உன் எச மான் மாற்றலாகிப் போய்விட் டானே. நீ போக வில்லேயா?" என்று நீங்கள் கேட்டால், "இல்லே! கொஞ்சம் தட்டுமுட் டுச் சாமான் மிச்சமாகி விட்டது. அதை எடுத்துக் கொண்டு இன் னும் இரண்டுநாளில் போகணும்" என்பான். அதைப்போல ஒரு எசமானுக்குக் கிடைத்த வேலேக் காரர்களா, நாங்கள்! இல்லே! நாங்கள் திராவிடர் இயக்கத்தில் சேர்ந்தோமென்ருல் பெரியார் ராமசாமிக்காகவா சேர்ந்தோம்? இல்லே! கொள்கைக்காகச் சேர்ந் தோம்! எங்களுக்கு உணர்ச்சி யூட்டக் கூடிய, கவர்ச்சி யூட்டக் கூடிய, கொள்கை காந்தியாரிட மில்லாத காரணத்தால்—சர். சி. பி. ராமசாமியிடமில்லாத கார ணத்தினல்—சங்கராச்சாரியாரிட மில்லாத காரணத்தினல்—தர்ம புரம் சந்நிதானத்திடம் இல்லாத காரணத்தினல்—வேறு எந்த அரசியல் கட்சியிடமுமில்லாத காரணத்தினல்-பெரியார் ராம சாமியின் கொள்கையில் இருந்த காரணத்தினல, சேர்ந்தோம்!! எந்தக் கொள்கைக்காக நானும் மற்றவர்களும் சேர்ந்தோமோ அந்தக் கொள்கை எங்களிட மிருக்கிறது. அவர்கொள்கையை விட்டுப்போய்விட்டார்! இன் றைக்கு நாங்கள் இயக்கத்திலே இருக்கிருேமென்ருல் எதற்காக எம் ஜி. ராமச்சந்திரன் இயக்கத்



மதுரை மாநாட்டில் இருந்த அண்ணாவின் சிலே

திலிருப்பது எனக்காகவா ? இவ்வளவு பேர் இங்கே நீங்கள் கூடியிருப்பது எனக்காகவா? இல்லை! நான் வந்ததும் உங்களுக்காகவா ! இரண்டுபேரும் கொள்கையால் ஒன்றுகூடியிருக்கிறோம் ! கொள்கையின் காரணமாக இங்கே கூடிருக்கிறோம் ! கொள்கையை விட்டுவிட்டவர்களைப்பற்றி நமக்குக் கவலையில்லை. கொள்கை விட்டபிறகும்' கொள்கைக்காகச் சேர்ந்தவர்கள் அவர்கள்பின்னலேயே போகவா முடியும் ?

ஒரு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பெரியார் ராமசாமி ஒன்றைக் கண்டுபிடித்தார்கள்—அதை எல்லோரும் இப்போது கூறிக்கொண்டிருக்கிறார்கள்—அதுதான், "திராவிட நாடாவது ! வெங்காய நாடாவது !!',, என்பது எல்லாக் கட்சிக் காரர்களும், ஆளுக்கு இரண்டு வெங்காயத்தை உதாரணத்துக்குஅழைத்துக்கொண்டு கேட்கிறார்கள், "அதுதான் வெங்காய நாடாயிற்றே! அதை ஏன் இன்னும் கேட்கிறீர்கள்?" என்று காமராசரும் கக்கனும் பக்தவத்சலமும் சுப்ரமணியமும் ஆளுக்கொரு வெங்காயத்தை எடுத்துக் கொண்டு விளாசுகிறார்கள் ! தமிழரசுக்கழகத்தலைவர் கொஞ்சநாளைக்கு முன்பு பெரியாரிடம் போய் வந்து, அறிக்கை விடுத்திருக்கிறார்'', "பெரியார் சொன்ன வெங்காயத்தை உறித்துப் பார்த்தேன். இப்போதான் தெரிகிறது. வெங்காயத்தில் ஒன்றுமேயில்லை. அதைப் போலத்தான் திராவிடநாடு'', என்று. அதான் வெங்காய நாடுன்னு அவர் சொல்லிவிட்டாரே, திருப்பித்திருப்பி ஏன் அதைக்கேட்கிறீர்கள், என்கிறார்கள். நண்பர்களே ! ஆட்சியாளருக்கும் சொல்கிறேன், மாற்றுக் கட்சிக்காரர்களுக்கும் சொல்கிறேன்...ஆம்! இது வெங்காய நாடுதான் !!......நாம் கேட்கிற திராவிடநாடு, வெங்காய நாடுதான். இப்படியொரு உவமையைக் கற்றுக்கொடுத்ததற்காகப் பெரியார் ராமசாமிக்கு நாம் என்றென்றைக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வோமாக. நாம் கேட்பது வெங்காய நாடுதான் ! ஏனென்று கேட்டால், சாம்பாரிலேயே மிகமிகச் சிறந்தது, வெங்காயச் சாம்பார்தான். சாம்ரிலே என்னென்ன காய்கறிகள் போட்டாலும் வெங்காயத்துக்கு ஈடு இணை வேறெதிலேயும் இடையாது. பஜ்ஜியிலேயே ருசியுள்ள பஜ்ஜி வெங்காயப் பஜஜிதான் ! தோசையிலேயே மிக உயர்ந்த தோசையும் ருசியுள்ள தோசையும் வெங்காய தோசைதான் ! சிலபேர் வெங்காய தோசைக்காகவே சென்னையில் கோடம்பாக்கத்திலேருந்து டவுனுக்குவருவார்கள். ஆமாம் ! அது ருசியே ருசிதான்! சட்ணியிலேயே, மிகவும் ருசியுள்ள சட்ணி வெங்காயச் சட்ணிதான். கடலைப் பருப்பு சட்ணியைவிட, தேங்காச் சட்ணியைவிட, வெங்காயச் சட்ணித்தான் அருமையாயிருக்கும். சைவன் வீட்டிலே போய்ப் பார்த்தீங்கன்னு, வடகம்போடுவதற்கு அதிகம் பயன்படுத்துவது வெங்காயம்தான்! வத்தல் குழம்புக்கு உதவி செய்வது வெங்காயம்தான் ! அது மட்டுமல்ல, பிரியாணிக்கு உதவி செய்வதே வெங்காய தான். என்னதான் குருமா வைத்திருந்தாலும், என்னதான் சாபீஸ் வைத்தாலும் கூட வெங்காயம் வைத்தால் தான் பிரியாணிக்கு நன்றாயிருக்கும். எப்பொழுதாவது ஆட்சியாளர் கண்ணீர்ப் புகையை வீசுவார்களேயானல், அதைத் தடுத்து நிறுத்த உபயோகப்படுவதும் வெங்காயம்தான் ! வெங்காயத்தைச் கசக்கிக் கொஞ்சம் கண்ணிலே விட்டுக் கொண்டால், கண்ணீர் புகை ஒன்றும் செய்யாது. இதை சென்னை, கோவை, மதுரைத் தோழர்கள் நன்றாக அறிவார்கள். அதுமட்டுமல்ல ! மகாவிஷ்ணுக்குப் பிடித்தமானதே, வெங்காயம் தன். வெங்காயத்தைக் குறுக்கே வெட்டின சக்கரம் இடைக்கும் நெடுக்காக வெட்டினல் சங்கு கிடைக்கும்! மகாவிஷ்ணுவுக்கு வேண்டிய சங்கு சக்கரமே - வெங்காயத்திலேதான் இருக்கிறது ! எல்லோருக்கும் பயன்படக் கூடியது வெங்காயம்—விரும்பக்கூடியது வெங்காயம்—விலை மதிப்புள்ளது வெங்காயம்—உயிரைக் காப்பாத்தக் கூடியது வெங்காயம் !

மூன்றரைக்கோடி தமிழர்கள் மூன்றரைக் கோடி தெலுங்கர்கள்—ஒன்றைக்கோடி மலையாளிகள்—இரண்டு கோடி கன்னடியர்கள் வாழ்கிற ஒவ்வொரு பகுதிகளும் மொழிவழி பிரிந்து இனவழி ஒன்றுபடுவதுதான், திராவிடக் கூட்டாட்சி. நீங்கள் வெங்காயத்தைப் பார்த்தால், பிரிந்து போகிற உரிமையோடு ஒட்டிக் கொண்டிருப்பதுபோல இருக்கும். அதுதான் திராவிடநாடு! வெங்காயத்தை மூடியிருக்கிற சருகு போல கூட்டாட்சி—அதைப் பிரித்துவிட்டுப்பார்த்தால், பிரிந்து போகிற உரிமையோடு, ஒட்டிக் கொண்டு இருப்பது தென்படும். அதுதான், திராவிட நாடு !! எனவே நண்பர்களே, நாம் வெங்காய நாடுதான் கேட்கிறோம். பிரிந்துபோகிற உரிமையோடு கூடிய ஒட்டிக்கொண்டு வாழ்வது தான் திராவிடநாடு. அதைப்பெறத் தான் நாம் பாடுபடுவோமாக !! மேலும் பண்டித நேரு அவர்களுக்கடுத்தபடியாக — அவர் நீண்ட நாள் வாழ்வாராக !—இவ்வளவு பெரியதுணைக் கண்டத்னத நிர்வகிக்கக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள். யாரும் கிடையாது ? அறிஞர் அண்ணவும் அவர் தம் பரம்பரையும் கூறும் கருத்தைத் தவிர, நேரு அவர்களுக்குப் பிறகு, லால்பகதூர் சாத்திரியாருடைய கருத்துவந்து இங்கு தங்கும்—என்றுமட்டும் யாரும் எண்ணாதீர்கள்! அகில உலகச் சூழ்நிலை, நமது உணர்ச்சியைப் பயன்படுத்தியே, தீரும். ஏன்? அகில இந்தியச் சூழ்நிலையும் இந்த உணர்ச்சியைப் பயன்படுத்தவே செய்யும். ஆகவே இந்த உணர்ச்சி, ஒருபோதும், வீண்போகா! வீணுகா!! என்பதை மட்டும் நீங்கள் உணருங்கள். நாளைக்கு காமராஜர் அவர்களுக்குப் பிறந்த நாள் கொண்டாட இருக்கிறார்கள்! ஆளுக்கு ஆள், மனிதருக்கு மனிதர் காட்ட வேண்டிய மரியாதைக்கு அடையாளமாக அவரை நாம் வாழ்த்துவோமாக! அவருடைய பிறந்த நாளைக் கொண்டாடும் தோரணையில், நம்மை வம்புக்கிழுக்க, அவர்கள் முயற்சிப்பார்கள். நாம், அதற்கு இடங்கொடுக்காமல், பொது வாழ்க்கையிலீடுபட்ட ஒருவருடைய பிறந்த நாளில், நம்முடைய வாழ்த்துக்களையும் சேர்ப்பித்துவிட்டு—நமது பணியினை நாம் செய்வோமாக !!

—0—

(2-ம் பக்கத் தொடர்ச்சி

றார்கள். மற்றும், நாணயச் செலாவணியின் மதிப்பானது நிலைகுலைந்து நின்ற காலத்தில் ஜர்மானியர்கள் ஒரு துண்டு ரொட்டிக்கு ஏங்கி நின்ற சமயத்தில் யூதர்கள் ஆடம்பரமான ஹோட்டல்களில் சொகுசான அன்ன பானங்களை உண்டு களித்தார்கள். துவேஷம் ஏற்படாமல் இருக்க முடியுமா?

சில புள்ளி விவரங்களை இங்கு எடுத்துக் காட்டுவோம், ஒரு யூத நிபுணன் தொகுத்துள்ள புள்ளிகளிலிருந்தே இவை எடுக்கப்பட்டன என்பதையும் இங்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். 1925ம் வருஷத்தில் எடுத்த ஜன கணிதப்படி, ஜர்மனியில்465,379 யூதர்கள் இருந்தார்கள். அதாவது ஜர்மனியின் மொத்த ஜனத் தொகையில நூற்றுக்கு ஒருவர் வீதம் ஆகிறது. இவர்களுடைய மொத்த வருமானம் 1928ம் வருஷத்தில், 225,000,000 ரூபாய் அதாவது ஒவ்வொரு யூதனுடைய சராசரி வருஷ வருமானம் 1,800 ரூபாயாகிறது. ஆனல் ஒரு ஜர்மானியனைவிட, நான்கு மடங்கு பணக்காரனுக ஒரு யூதன் இருந்தான். ஜர்மனியின் தலைநகரான பெர்லினிலுள்ள ஜர்மானியர்களுடையவும், யூதர்களுடையவும், சராசரி வருமானத்தைக் கணக்கிட்டுப் பார்த்தோமானல், ஒரு யூதன் ஒரு ஜர்மானியனைவிட ஏழு மடங்கு பணக்காரனுக இருந்திருக்கிறான்.

வியாபாரம் முதலிய துறைகளில் யூதர்களின்செல்வாக்கைச் சிறிது கவனிப்போம். பெர்லின் நகரத்தைப் பொறுத்தமட்டில், யூதர்கள் நூற்றுக்கு 4 பேரே இருந்தார்கள். ஆனல் நெசவுத் தொழில்ஸ்தாபனங்களில் 100க்கு 43 வீதம் யூதர் வசம் இருந்தன. ஜவுளி வியாபாரிகளில் 100ககு 61 பேர் யூதர்கள். இங்ஙனமே, மற்றக் கைத்தொழிற் ஸ்தாபனங்களில் பெருபாலானவை யூதர் வசமே இருந்தன.

1930ம் வருஷத்தில் ஜர்மனியில் மொத்தம் 994 பாங்கிகள் இருந்தன. இவற்றில் 485 பாங்கிகள் யூதர்களுடையவை. அதாவது நாட்டின் பணப்புழக்கத்தில் பாதி பாகம் யூதர்வசம் இருந்ததென்று துணிந்துகூறலாமல்லவா? பெர்லினிலிருந்த 'ஷேர் புரோக்கர்' களில் நூற்றுக்கு 89 பேர் யூதர்கள்.

பெர்லினில் நடைபெற்றுக் கொண்டுவந்த செல்வாக்கான மூன்று பத்திரிகைகளும் யூதர் வசமே இருந்தன.

சர்வகலாசாலைகளில் படித்துப் பட்டம்பெற்ற ஜர்மானிய இளைஞர்களிடையேயும், யூத துவேஷம் பரவுவதற்குப் பல காரணங்கள் இருந்தன. யூத இளைஞர்கள் படித்துப் பட்டம்பெற்ற பிறகு சிறந்த நியாயவாதிகளாகவும், திறமை வைத்தியர்களாகவும், பிரபலமான நூலாசிரியர்களாகவும், திறமையான வைத்தியர்களாகவும், பிரபலமான நூலாசிரியர்களாகவும் இருந்துஏராளமான பணம் சம்பாதிக்கத் தொடங்கினர்கள். ஆனல் ஜர்மானியப் பட்டதாரிகள் வயிற்றுப் பிழைப்புக்கு திண்டாடி நின்றார்கள். உதாரணமாக, நியூரென்பர்க் என்ற ஊரில் நூற்றுக்கு 52 பேர் யூதர்கள். 3450 பாரிஸ்டர்களில் 1925 பேர் யூதர்கள். மற்றும் பெர்லினிலிருந்த பிரபல நாடக மண்டபங்கள் 29. இவற்றில், யூதர் நிருவாகத்தில் இருந்தவை 29.

இந்தப் புள்ளி விவரங்களுக்கு எதிராக, ஐரோப்பிய யுத்தத்தில் ஜர்மனிக்காக உயிரைக்கொடுத்த யூதர்கள் எத்தனை பேர்? நூற்றுக்கு ஏழரைபேர்தான். ஆனல் ஜர்மானியரோ, நூற்றுக்கு 18 பேர் வீதம் உயிர் துறந்திருக்கிறார்கள்.

இந்த நிலையிலேதான், ஹிட்லர் யூதருக்கு விரோதமான பிரசாரத்தைச் செய்யத் தொடங்கினன் புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டினன். அனைவருடைய மனத்திலும் சட்டென்று பற்றியது. யுத்தத்திலிருந்து திரும்பி வந்து பிழைப்புக்காக அலைந்து கொண்டிருந்தராணுவ வீரர்கள், நாணய மதிப்பின், சீரழிவினல் வீழ்ந்துபோன மாஜி பணக்காரர்கள், மத்திய வகுப்பார், சொற்ப சம்பளத்தில் உயிரைப் பிடித்துக் கொண்டிருந்த அரசாங்க உத்தியோகஸ்தர்கள் முதலிய பலரும் நாஜி கட்சிக்கு ஆதரவுகாட்டினர்கள். இந்த ஆதரவு நகரங்களைப் பொறுத்தமட்டில் இருந்தது.

யூதர்கள் லேவாதேவி தொழில் செய்வதில் நிபுணர்கள். இவர்கள் கிராமங்களில், விவசாயிகளுக்கு அதிக வட்டிக்குக் கடன் கொடுத்து வாங்கி வந்தார்கள். இதனல், விவசாயிகளுக்கு யூதர்கள்மீது துவேஷம் இருந்து கொண்டிருந்தது. எனவே, கிராமவாசிகளும் நாஜி கட்சியில் சந்தோஷத்துடன் சேர்ந்தார்கள்.

மற்றும், பொதுவுடமை இயக்கம் ஜர்மனியில் பரவுவதற்கு யூதர்கள் துணை செய்தார்கள். நாட்டிலே அவ்வப்பொழுது ஏற்பட்ட தொழிலாளர் வேலை நிறுத்தங்கள், சச்சரவுகள், குழப்பங்கள் முதலியவையும், யூதர்களுடைய தூண்டுதலின் பேரிலேயே நடைபெற்றன வென்று ஜர்மானியர்கள் நம்பினர்கள். இதில் ஓரளவு உண்மையும் இருந்தது. இவற்றிற்கெல்லாம் தலைமையாயிருந்து நடத்தியவர்களிற் பெரும்பாலோர் யூதர்களே. ஜர்மானியர்கள் கொண்ட துவேஷத்திற்கு இஃதொரு காரணமாயிருந்தது.

(11-ம் பக்கம் பார்க்க)

9-ம்பக்கத் தொடர்ச்சி

ளும் வகையில் நாட்டின் வாலிபர்கள்—தமிழ் மொழியுன்பால் அன்பும் ஆதரவும் கொண்ட பெருமக்கள்---முன் வருகிருர்கள். அப்படி முன்வரும் ஒரு மக்கள் எழுச்சியை வைத்துத்தானே அரசியலில் எடைபோட இயலும்? அதைவிட்டு சாத்தியமானதா என்கிற கேள்வியைக்கிளப்பவோசாத்தியமல்ல என்று தாங்களே தீர்ப்பளிக்கவோ, இவர்கள் யார்? அப்படியே பார்த்தாலும் அரசியலில் எதுதான் சாத்தியமில்லை? ஒன்ருக ஒரு காலத்திலிருந்த ரோமாபுரி கீழ்மேல் என்று இரு பிரிவாகவில்லையா! மாவீரன் ஜூலியஸ் சீசர் காலத்திய ரோமபுரிக்கும் மன்னன் பைசான்டைன் காலத்திய ரோமாபுரிக்கும் வித்தியாசமுண்டே. ஆட்சியின் வசதிக்கென்று ரோம்சாம்ராஜ்யம் இரண்டு துண்டாக்கப்பட்டது.

அதேபோல ஒரு நாளைக்கு மாபெரும் இந்திய சாம்ராஜ்யம் துண்டுகளாக்கப்படாது என்று எந்த ஆதாரத்தின் மீது கூற முடியும்? ஐரோப்பா முழுதும் ஒரே நாடாகவேண்டும் என்று ஆர்ப்பரித்தான் நெப்போலியன்! ஒவ்வொரு நாடுகளையும் வென்று இழுத்துப்போட்டு, பெரிய சாம்ராஜ்யம் ஆள எண்ணினுன்!! என்ன ஆயிற்று அவனுக்குப் பின்ஞல்? இந்தியா-இந்தியா என்கிருர்களே, இதுதான் எப்படி ஏற்பட்டது? வெள்ளைக்காரன் வருவதற்குமுன் குமரி முனைத் தீட்சிதரைக் கேட்டிருந்தால், "அதெப்படி சாத்யமாகுமோ?" என்றுதான்சொல்லியிருப்பார். தனது புத்தி கூர்மையாலும் சாதுர்யத்தாலும், இவ்வளவு பெரிய துணைக்கண்டத்தை ஒன்ருக்கினுன், வெள்ளையன். அரசியல் வாழ்க்கையில் எதுதான் நிரந்தரம்? எதுதான் சாசுவதம்? உடைந்து இருந்தவை ஒன்ருவதும், ஒன்ருயிருந்தவை உடைவதும், உலகப்படத்தில் பல சமயங்களில் நடந்திருக்கிறது. அப்படி ஒருதடவை, இந்தியத் துணைக்கண்டமும்தான பிரியட்டுமே! இலாபமில்லையென்ருல் பிரிந்தவர்கள் பிறகு கூடி வாழ்ந்துவிட்டுப் போகிருர்கள்—ஒன்ருயிருப்பதால் இன்னின்ன நஷ்டம் என்று திராவிடமுன்னேற்றக் கழகம் ஆண்டு பலவாகச் சொல்லிவருவதற்கு, யாரால் பதில் சொல்ல முடிந்தது! பாதிக்கப்படும்போது, ஒவ்வொருவரும் தென்னுட்டிற்கு உரிமைகள் வேண்டும் என்று பேசாமலாயிருக்கிருர்கள்! வடநாடு மாமியார்—தென்னடு மருமகள்; மருமகளை மாமியார் வாட்டுகிருள் என்று அகில இந்தியம் பேசுவோர் கூட சில சமயங்களில் வாய்விட்டுச் சொல்லாமலாயிருக்கிருர்கள்!!

* * *

"திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு வெளியிலிருக்கும் சிலர் தெற்கை டில்லி புறக்கணிக்கிறது என்று சொல்வதை அண்ணுதுரை, தனக்குச் சாதகமாக, மாநாட்டில் எடுத்துப் பேசியிருக்கிருர். திட்டங்களின்படி தெற்தப் பகுதிகளுக்கு அதிகம் வேண்டும் என்று தென்னிந்திய வர்த்தக சபையினர் அடிக்கடி கோருவதை மனதில் வைத்துத்தான் இப்படிப் பேசியிருக்க வேண்டும், இந்த வர்த்தகர்கள் தி. மு. க வின் திராவிடர் பெடரேஷனுக்குப் பயன்படுவார்கள் என்று அவர், எண்ணிஞல், அது முழுத் தவறு-" என்றும், இந்து, எடுத்துக் காட்டியிருக்கிறது! சாமராசர் டில்லியைக் கண்டித்தார்--சுப்ரமணியம் வடநாட்டிடம் சண்டைபோட்டார்—பக்தவத்சலம் பதறுகிருர் டில்லியின் அக்கிரமம் கண்டு-தென்னுட்டு அரசுகள் ஒன்ருக வாழவேண்டும் என்று சஞ்சீவிரெட்டியார் சொன்ஞர்—இப்படி, நாம், சான்றுக் கிழுக்கும்போது, நமக்குத் தெரியாததல்ல, இவ்விதம் கூறியோரெல்லாம் உடனே திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்ப்பார்கள் என்று! எனினும் நாம் அதை எடுத்துக் காட்டுவதேன்? டில்லியின் போக்கு கண்டு, நாம் மட்டுமல்ல, சமயத்தில் அவர்களும் எரிச்சலடைகிருர்கள்—அப்போது இப்படியெல்லாம் சொல்கிருர்கள்—என்பதை நாட்டுக்கு உணர்த்தத்தான்! தென்னிந்திய வியாபாரிகள், தென்னகம் புறக்கணிப்படுவதை எடுத்துச் சொல்வதால், அவர்கள் உடனே தி. மு. க வுக்கு வந்து சேர்ந்து விடுவார்கள் என்று நம்பும் பைத்தியக் காரர்களல்ல, நாம், என்ருலும், ஒன்ருகவே வாழவேண்டும் என்று கூறும் அகில இந்திய வாதிகளான அவர்களும் டில்லியின் அநீதியைக் கண்டிக்க முன் வரும்போது, அப்படிப்பட்ட அநீதிக்கு ஆட்பட்டு, ஒவ்வொருமுறையும் கெஞ்சிப் பிழைப்பானேன்—என்று சுட்டிக்காட்டுகிருேம். உண்மையிருப்பதால்தானே ஊமையராயிருப்போர்கூட உறுமநேருகிறது என்று மக்களிடம் எடுத்துரைக்கிருேம். இதனுல், முதலாளிகளையும், வாணிபப் பிரபுக்களையும் வாருங்கள் வாருங்கள் என்று அழைக்கிருேம் என்ருபொருள்!! அவர்களுக்கு நாடு பெரிதாகயிருந்தால்தான் வியாபார வேட்டையாட முடியும்—முதலாளித்துவமே எப்போதும் பெரிய நாடுகளைத்தான் விரும்பும்—மார்க்கெட்டுக்கு உகந்ததாக ஒரு பகுதி இருப்பதையே ஆசைப்படும்—என்பது, நாமோ, நம்முடைய தலைவரோ, அறியாததா!! இருந்தும் 'இந்து' ஏட்டார், இதைப் பெரிய காரணமாக மதித்து, நமக்கு எச்சரிக்கை செய்கிருர்—இதையெல்லாம் நம்பி, ஏமாந்துவிடாதீர்கள், என்று. எச்சரிக்கை எரிச்சலின், அடிப்படையில் வந்திருந்தாலும்கூட, ஏட்டாருக்கு, நன்றி செலுத்துவோம், நாம்—இந்தளவுக்கு நமக்கு "நல்வழி" காட்டும் ஆசையும் அக்கரையும் உதயமானதற்கு! அலட்சியம் என்று கருதப்பட்டதற்கு அறிவுரை வழங்கவேண்டும் என்று முற்படுவதே இருதயத்திலுண்டான சலனத்தின் விளைவு என்பர் உள நூலறிஞர்கள்! இந்துவின் இதயமும் நமக்கு விளங்காமலில்லை!!

"எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் வேண்டும்—கப்பற் கட்டும் தளம் வேண்டும்—ஆலைகள் பல வேண்டும் என்று கேட்டுவிட்டு அதே மூச்சில், தென்னுட்டின் மீது வடநாட்டுக்குள்ள ஆதிக்கத்தை எதிர்க்க, வடநாட்டு வாணிப நிலையங்களில் அடையாளமறியல் செய்யவேண்டும் வடநாட்டுப் பொருள்களைப் புறக்கணிக்கவேண்டும் என்று கிளர்ச்சிகள் செய்வதென்ருல் மக்கள் இக்கட்சியைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இரண்டும் கெட்ட குழப்பமான நிலை கொண்டது, இளம்பிராயமுள்ளது என்றுதானே!!", எனவும் கேட்கிருர், இந்து ஏட்டார். "நமக்கு வேண்டிய இரும்பும் நிலக்கரியும் வடக்கிலிருந்து வருகிறது—இதையா நாம் பகிஷ்கரிக்க வேண்டும்? இப்படியொரு துவேஷத்தைச செய்துகொண்டே. எனக்கு இது வேண்டும் அது வேண்டும் என்று கேட்டால் எப்படி தி. மு. க வின் கோரிக்கைகளை யூனியன் சர்க்கார் மதிப்பார்கள்? வடஇந்தியாவில் இலட்சக் கணக்கான தமிழர்கள் வாணிபத்திலும் பிறவழிகளிலும்சம்பாதிப்பதுபோல, இந்தியப் பிரஜைகளானயாருக்கும் எங்கும் போய் வசிக்கவும் உரிமையிருக்கும்போது அவர்களுக்கு எதிராகத் துவேஷம் உண்டாக்கலாமா?", எனவும் கேட்கிருர், நம்மை. உள்ளபடியே, 'இந்து'வும் இப்படி எண்ணுகிறதே என நாம் சோகித்தாலும், விளக்க வேண்டியது நம் கடமையன்ருே!! இந்திய விடுதலையின்போது வெள்ளையன் பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ருர், காந்தியார். அதற்காக அவன் நாட்டில் செய்தனுப்பிய வானெலியில் வந்த கீதத்தையும் செய்திகளையும் கேட்கவா மறுத்தார்? அவன் நாட்டில் அச்சடிக்கப்பட்டது என்பதற்காக, "மான்செஸ்டர் கார்டியனை" வாங்கிப் படிக்கமாட்டேன் என்ரு சொன்ஞர்? அவன் உண்டாக்கிய இரயில் — அதன் இயந்திரம் பழுதானுல் அதற்குரிய கருவிகள் இங்கிலாந்திலிருந்துதான் வருகின்றன—அக்கருவிகளைப் பகிஷ்கரியுங்கள்—அந்த இரயில்களில் ஏருதீர்கள் என்ரு சொன்ஞர்? அந்நியப் பொருள் புறக்கணிப்பு என்பதும் வடவர் வாணிப நிலையங்களில் அடையாள மறியல் ஒருநாள் கொண்டாடுவது என்பதும், நமது அதிருப்தியையும் கண்டனத்தையும் காட்டவே ஒழிய—டாடா செய்ததால் அது இரும்பல்ல, வேம்பு என்ரு சொல்லப் போகிருேம்? வடவர் வாணிப நிலையத்தில் நூறு ரூபாய்க்குச் சில்லரை கொடுத்தால். அது சில்லரையல்ல, சாணி உருண்டை என்ரு தள்ளிவிடுவோம்? காந்தியடிகளே சொல்லியிருக்கிருர், "இப்படிப் புறக்கணிப்பு செய்கிருேம் என்பது நமது மன எழுச்சியையும் அதிருப்தியையும் காட்டும் அடையாளம்", என்று. அதோடு, எது இங்கு சாத்தியமோ அதை ஏன் அந்நிய நாட்டானுக்குக் காசு கொடுத்து நாம் அழவேண்டும் என்ருர்.

அதற்கு உதாரணமாக துணிமணிகளை எடுத்துக்கொண்டார்- ஏன் லங்காஷயரும் மான்செஸ்டரும் இங்கு வரவேண்டும், அதற்குப் பதில் நாமே நெய்து கதரை உடுப்போம் என்ருர். இதெல்லாம் தேசீய எழுச்சியை ஆதிக்க வர்க்கத்துக்கு அகிம்சையான முறைகளில் உணர்த்தும்வழிகள்

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

தி. மு. க. பிரச்சாரம் பலனளிக்கிறது

முந்திரி வளர்ச்சிக்குத் தனியார் துறைக்குச் சர்க்கார் உதவி

ஆண்டு	ஏக்கர்	உதவி தொகை
1959—60	7,000	5-60 லட்சம்
1958—59	28,222	14.45 ,,
1659—60	9,819	5.62 ,,
1960—61	9,280	8.93 ,,

அறிஞர் அண்ணுவின் ஆயிரம் கோடித் திட்டத்தில் முந்திரி வளர்ச்சிக்கு வழிகாண வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. 1957ம் ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தி. மு. க. அவர் ஒட்டியின் மூலம் முந்திரித்தொழில் தேய்வதையும் சிந்திரி சிறப்பதையும் எடுத்துக் கூறிற்று.

'அறப்போர்'மாநாட்டு மலர் பாதுகாத்து வைக்கத்தக்க முறையில் அமைந்துள்ளது. மிகவும் மகிழ்ச்சி. தங்கட்கு என் பாராட்டு உரியதாக!

ஏ. பி. சனுர்த்தனம்.

9-ம் பக்கத் தொடர்ச்சி

என்பது அவர் கொள்கை! அதே வழியினைத்தான் திராவிட முன்னேற்றக் கழகமும், டில்லி ஆதிக்கத்துக்கு உணர்த்த விரும்புகிறது மன உணர்வைக்காட்டும் அறப்போரேயன்றி, போர்க்காலங்களில் ஒரு நாட்டுக்கு இன்னொரு நாடு போட்டுக்கொள்ளும் தடைகளைப் போலவா கருதுவது? அதுவும், இந்துவா, கருதுவது? எத்தனையோ வழிகள் உண்டு, உள்ளத்து உணர்வை, ஒரு ஆதிக்கத்துக்கு உரைக்க! நாம் வட நாட்டுஅரசை ஏகாதிபத்திய அரசென மனமார நம்புகிறோம்!! அதற்கு நம் அதிருப்தியைத் தெரிவிக்க இது நல்லவழியென வும் கருதுகிறோம். இப்படிச் சொல்லியதற்கு பதில், "ஒரு வட நாட்டான் கடைகள் இங்கே இருத்தலாகாது. பார்த்தாலே விரட்டவேண்டும். வடநாட்டான் அச்சடித்தனுப்பிய ஆங்கில நூல், ஷேக்ஸ்பியருடையதா யிருந்தாலும் காந்தியடிகளுடையதாயிருந்தாலும் உடனே கடலில் தூக்கி எறிய வேண்டும்'', என்று சொல்லியிருந்தால் அதற்குப் பெயர் துவேஷம்? அப்படியா அறிஞர் அண்ணா சொல்லுவார்! வெறுப்பால் எதையும் வெல்ல முடியாது என்பதுதானே வள்ளுவர் வாக்கு-அந்த வள்ளுவரை இருதயத்தில் ஏந்தியிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் ஒருபோதும் வன்முறைக்குப்போகாது தன்னுடைய அதிருப்தியை, கண்டனத்தை, மிகவும்சமாதான முறையில், வட இந்திய மக்களுக்கு அல்ல, வட அரசுக்குக் காட்டும் நடவடிக்கைதான் மறியலும் புறக்கணிப்புமே ஒழிய, துவேஷத்தையும் பகைமையையும் உண்டுபண்ணுவதல்ல.

இந்த அடிப்படைகளையெல்லாம் அறியாத காரணத்தாலேயே, 'இந்து' ஏட்டார்.

சிறுபிள்ளைத்தனமான ஸ்டண்ட்டுகளை விடவேண்டும்
உண்மைகளை உணர வேண்டும்
பிரிவினை முழக்கங்களை விடவேண்டும்

என்கிற அறிவுரைகளை வழங்கி, தி. மு. க வின் எதிர்காலத்துக்கு இதுவே நல்வழி எனவும் செப்பியிருக்கின்றார்! அவருடைய 'அன்புக்கு' நாம் நன்றி தெரிவித்துக் கொள்வோமாக! அதே சமயத்தில், "இப்படியெல்லாம் வெறுப்பைக் கிளப்பிக்கொண்டு இதைச் செய் அதைச் செய் என்றால் எப்படி யூனியன் சர்க்கார் இணங்கும்" என்கிற அறியாமை வாதம் கண்டு இரங்குவோமாக!!

"இந்து' ஏடு, சகலரும் மதிக்கும் ஏடு. சகலகலாவல்லவர்கள் மிருந்து இயக்கும் ஏடு. அதற்கே, நம்மைப்பற்றியும், நமது கூற்றுக்களைப்பற்றியும் இன்னும் சரிவரப் புரியாததின் விளைவே.இப் புலம்பல்களுக்குக் காரணம்! இதைபோலப் புரியாத நிலையிலிருப்போர், நட்டில், ஏராளமிருக்கிறார்கள். நாம் யார்—நம்முடைய அறவழியின் தன்மை என்ன—எப்படிப்பட்ட அகிம்சா வாதிகள் நாம்—நாம் கேட்கும் திராவிடநாடு என்றால் என்ன—ஏன் அது வாழமுடியாது—நாம் என்ன வட இந்தியர்களை மனிதர்களென்று எண்ணவோ மறுக்கிறோமா—நமக்கும் வட அரசுக்கும் பகையா, வடநாட்டு மக்களுக்கும் நமக்கும் பகையா-என்பன போன்ற அடிப்படைக் கருத்துக்களே, இன்னும் பலருக்குப் புரியாமலிருக்கிறது.

இதுவரை, அவர்கள், புரிந்து கொள்வதே தேவையில்லை யென்று இருந்தார்கள்.

இப்போது அறிந்து கொள்ள ஆசைப்படும் கூட்டத்துக்கு வருகிறார்கள். மிகமிக வெறுக்கப்பட்ட கட்சியான நமக்கு இதுவே ஒரு விருந்துதான்! 'இந்து ஏடு, எழுதுவதென்றால் இன்னும் ஐந்தாண்டுகளில் நமக்குச் சாதாரணமானாலும் ஆகலாம்!

ஆனால் இப்போது! புரியாதவர்களுக்கு, தவறாகப் புரிந்து கொண்டிருப்பவர்களுக்கு, கழகத்தைப்பற்றி எடுத்துரைக்க வேண்டும்.

அன்போடு, உரைக்க வேண்டும்—அரச மரத்தடி, தெருத்திண்ணை, குளக்கரை, வயல் மேடு எங்கும்; நமது கழகம் பற்றி நாம் எடுத்துரைக்க வேண்டும்——ஏனெனில், எதிர்காலம் நமதே! இதில் கொஞ்சமும் ஐயமில்லை என்பதையே மதுரை மாநாடு நமக்கு உணர்த்துகிறது! வரும் எதிர்காலத்தை வரவேற்க, எல்லோரது இதயத்தையும் நம்முடையதாக்க நாம் முயல வேண்டும்! அப்படியொரு காரியத்தை நாம செய்ய வேண்டுமானால், அடுத்து வரும் தேர்தலில் நாம் வெல்லலாம் — அரசும் நிறுவலாம்--பிறகு, கன்னடத்துடனும் களி தெலுங்குடனும், கவின் பெறு மலையாளத்துடனும்; உரிமையோடு பழகலாம்! ஒவ்வொருவராகப் போய் ஆள் பிடிப்பதைவிட, நமது உணர்ச்சியினைப் பக்கத்து அரசுகளுக்கும் உணர்த்தி, "அவர்களும் நாமும் அண்ணன் தம்பிகள்" என்று பாசத்தைப் பலப்படுத்தலாம்!!

அரசியல் வாழ்வில், சாத்யமற்றது என்று எதுவும் இல்லை.

சரியான முயற்சியும் அன்பான வழியில் எதையும் அனுகும் பான்மையுமிருந்தால் நிச்சயம் வெற்றிபெறலாம்.

எதிரிகள் இன்னு சொன்னால் கூட இனியவை கூறுவோம்! விளக்கமளிப்போம்!

இதனையே மதுரை மாநாட்டில் நாம் பெற்ற பாடமாக எண்ணுவோம்--பயனுவோம் நமது இன்பத் திருநாட்டுக்கு!!



பொன்னிவளவன்

கவிதைகள்

தமிழில் கவிதை யாப்பவர்கள் தொகை கொஞ்ச காலமாக அதிகமாகி வருகிறது. உணர்ச்சியைக் கொட்டுவது மட்டும் கவிதையாகி விடாது. உணர்ச்சியோடு கவிதை இலக்கணமும் ஒன்று சேரல் வேண்டும். அது மட்டும் போதுமா? எனின்—இல்லை! அதோடு நயமும் சொல் வளமும் சேரல் வேண்டும். தோழர் பொன்னிவளவன், புலவர் பட்டம் பெற்றவர். ஆதலால் இலக்கண வரம்புக்குள் இயற்கையாகவேவட்டமிடுகிறார். அதோடு சொல்வளமும் அதைச் சுவையுடன் எடுத்தாளும்திறனும் அவரது கவிதைகளில் மிளிர்கின்றன எனவே, அவர் கவிஞர் என நம்மால் வாயார அழைக்கப்படும் தகுதி பெற்றவர்! பாரதியார்—பாரதிதாசன்—பழைய நிகண்டுகள்—திரிகூடராசப்பர் முதலியோரின் பாடல்களைப் பக்கத்திலே வைத்துக்கொண்டு, அதே போல பாடல்முடையும் பல 'கவிஞர்'களை நானறிவேன்.

இயற்கை ரோஜாவுக்கும்திரைப் படத் தயாரிப்புகளில் பயன்படுத் தப்படும் காகித ரோஜாவும் வேறுதான்! தோழர் பொன்னிவளவன் ஒரு இயற்கை ரோஜா. புலமை மண்ணில் பண்பட்ட பூ. அவர் எழுத வேண்டும் நிறைய; அதற்காக நேரத்தைப் பயன்படுத்தவேண்டும்என்பதுதான்நம் ஆவல், ஒவ்வொரு துறையிலும் வல்லவர்கள் வேண்டும் திராவிடத்துக்கு! நமது ஆவலை நிறைவேற்றும் வகையில், தன்னுடைய கவிதைகளை மேற்கண்ட பெயரில் நூலாக்கியுள்ளார். விலை1-50.

கிடைக்குமிடம்:
முத்து வெளியீடு,
23, புதுப்பேட்டை,
பிள்ளையார் தெரு, சிதம்பரம்.

கம்பரசம்
(2-ம் பாகம்)

அறிஞர் அண்ணா அவர்களது கம்பரசம், அறிவியக்கம் வளரும் நேரத்தில், இலக்கிய வல்லாளர்களை விழிப்புறச் செய்த ஒரு எழில் நூலாகும்! அதனையொட்டி இப்போது இரண்டாம் பாகம், குறைந்த விலையில் வெளிவந்திருக்கிறது. உதய சூரியனுக்கு உரை கல்லும் தேவையா? விலை 50 காசுகள்.

கிடைக்குமிடம்:
சுகுமாரன் பதிப்பகம்
80, சி.எஸ். செட்டித்தெரு
சி. காஞ்சிபுரம்.

வெளிநாட்டு அனுபவம்

மறைந்த பழையகோட்டைத் தோழர் என். அர்ச்சுனன் அவர்களது துணைவியார் தோழியர் பார்வதி அர்ச்சுனன் தென்னாட்டுப் பிரதிநிதியாக அமெரிக்காவுக்குச் சென்று வந்தார். தன்னுடைய அமெரிக்கப் பயணத்தையும்அங்கு கண்டவைகளையும் மிகவும் தெளிவான முறையில் எழுதியுள்ளார்கள்: விலை ரூ 1.

கிடைக்குமிடம்:
அர்ச்சுனன் பதிப்பகம்,
சென்னை-24.

வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல் இங்கிலீஷ்படிக்கவும் பேசவும் கடிதங்கள்எழுதவும்கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரியபைண்டு புத்தகம் விலை ரூ. 5வி.பி.பி.செலவுரு.1-25

வாணி தமிழ், இந்தி சுபோதினி
தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ. 2-25 வி.பி.பி.செலவு 75 ந.பை.

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)
சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத்தைலம், ஸ்னோ. பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. விலை ரூ. 3. வி. பி. பி. செலவு ரூ 1.

குடும்ப இலகு வைத்தியம்
வீட்டு சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கி, ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்திய ரகசியங்களடங்கியது. தபால் செலவோடு ரூ. 3-50,

வாணி புக் டிபோ, 3, மலைய பெருமாள் தெரு,
(தபால் பெட்டி எண்: 239) சென்னை-1.

பாதிக்கப்பட்டோருக்கு வளையாபதி முத்துக்கிருஷ்ணன் உணவளிக்கிருர்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி அரசியல் குழப்பம் முதலியவைகளை ஆதாரமாகக் கொண்டு தாங்கள் செழிப்புறலாம் என்ற நோக்கத்துடன், போலந்து, முதலிய நாடுகளிலிருந்து ஏராளமான யூதர்கள்வந்து ஜெர்மனியில் குடியேறினுர்கள். இவர்கள் பணம் ஒன்றினையே குறியாகக் கொண்டு வந்தவர்களாதலால், பெரியவியாபா மோசடிகள் முதலியவைகளுக்குக் காரணமாகி விட்டார்கள். அரசாங்க உத்தியோகஸ்தர் சிலருக்கு லஞ்சம் கொடுத்து தங்களுக்குச் சாதகமான காரியங்களைச் சாதித்து அதிக பண வருவாயைப் பெற்ருர்கள். இவையெல்லாம் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டன...''

*   *   *

நூலில் குறிப்பிட்டுள்ளவை உண்மைதான். ஜெர்மனியின் வாழ்க்கையில் யூதர்கள் பெற்றிருந்த இடம் உயரமானது என்பதை மறுப்பதற்கில்லை. வாழ்க்கையில்முக்கியமான அம்சங்களில் அவர்கள்முதலிடம் வகித்தார்கள் என்பதும் உண்மையே ஈச்மென் செய்த படுகொலையின் விளைவாக ஜெர்மானிய இசையே தேடிப் பிடிக்க வேண்டிய நிலை எய்திற்ரும்! ஏனெனில் ஜெர்மானிய இசை நிபுணர்களாகயிருந்தஅனைவரும், யூதர்கள்தான். ஜெர்மன் பிரிண்ட்—ஜெர்மன் ஓவியம்—என்ருல், ஒரு தனித்தன்மையுடன் மனதைக் கவருவனவாகும். இந்த ஓவியத்தொழிலிலே அந்தளவுக்கு யூதர்கள், புகழ்பெற்று இருந்தார்கள்.

ஹிட்லர் சிறுவயது முதல், யூதர்களின் நடைஉடை பாவனைகளைப் பார்த்துத் தன் மனதில் ஒரு அசூயையை உண்டாக்கிக் கொண்டான் என்றும் கூறப்படுவதுண்டு.

யூதர்கள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் மேம்பட்டு இருந்தனர். அதே போலத்தான் ரஷியாவிலும் ஒரே ஒரு கூட்டம் வாழ்க்கையின் உயர்ந்த இடத்திலிருந்தது. அவர்களை எப்படி போல்ஷிவிக்குகள் சமாளித்தனர்? ரஷியாவிலிருந்த பூர்ஷ்வாக்களை நிலச்சுவான்தார்களை—எப்படி லெனின் சமாளித்தார்? ஜெர்மனியிலிருந்தவர்கள் யூதர்கள்! ரஷியாவிலிருந்தவர்கள் வேற்ருரல்ல, ரஷியர்களே!! அதேபோல ஜெர்மனியிலும் வாழ்க்கையின் உயரமான இடத்தில் சில ஜெர்மானியர் இல்லாமலில்லை. இப்படிப்பட்ட பேதத்தை—உயர்வு தாழ்வை ஒழிக்க பலாத்காரம் ஒன்றுதானு வழி? அவன் மேதை —அவன் வீடு மாடிக் கொண்டது—அவன் என்னைவிட உயர்ந்தவனும்—என்றெண்ணும் போது மனதுக்குள் எரிச்சலெனும் எரிமலை உண்டாகாமலிருக்காது—அதற்காக அவனை அடித்து உதைத்து அவனைப் பிணமாக்கி விட்டால் போதுமா? அவனுக்குள்ள பொருளாதாரவசதிகளைப் பெற நாமும் முயல வேண்டும்! தோழர் சமுத்திர பாண்டியன் குறிப்பிட்டுள்ளது போல, இங்கு போன்று அங்கே யூதர்கள் உயர்ந்த ஜாதி என்று கருதப்படவில்லை.

இங்குள்ள நாமாவது ஒரே மதத்தவர் என்றுகூறப்பட்டாலும் அதே மதத்துக்குள் அடிமையும் ஆண்டானும் ஏன், என்று எதிரொலி எழுப்பினேம். இந்தப் பிரச்னையைக்கூட நாம் எப்படிச் சமாளித்து வருகிறேம் என்பது உலகம் வியக்கக்கூடிய ஒன்ருகும்! பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்க ஆரம்பத்தில், பார்ப்பனர்களின்மீது ஒரு ஆத்திரத்தைத்தான் எழுப்பினுர். அதுகூட அவருடைய உள்ளக்குமுறலல்ல! அவர் சார்ந்திருந்த நீதிக்கட்சித் தந்தைகள், பார்ப்பனரல்லாத சமுதாயத்துக்கு "நீதி" பெறுவதற்காக, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் போன்ற சாத்வீக வழிகளைக் கண்டார்கள். அவர்களைப்போல நம்மவர்களும் முன்னேற வேண்டும் என்கிற உயர்ந்த அடிப்படையில் புறப்பட்ட ராச தந்திர முறையாகும் அது! அந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையால்தான் பார்ப்பனரல்லாதாரிலும் பெரும்பான்மையேர் படித்து முன்னுக்குவர முடிந்தது. நீதிக்கட்சி செய்தது தான் பிற்பட்டவர்களுக்குரியநன்மையைக் காணும் வழி! ஒருசெயலில் ஈடுபடுவதற்கு இரண்டு முறைகள் உண்டு. ஒன்று அழிவு வ்ழி. அதாவது 'நெகடிவ் மெதட்' எனலாம். இன்



வெள்ளத் தில் தண்டவாளம்

னென்று அமைதிவழி இதனை 'பாசிடிவ் மெதட்' எனலாம். அழிவுவழி அல்லது எதிர்ப்பு வழியிலேயே எப்போதும் இயங்குவதைவிட அமைதி வழிமூலம்,

காரிய சாதனையைப் பெறுதலே அறவழியாகும். இத்தகைய அமைதி வழியையே நீதிக்கட்சித் தந்தையான தியாகராயர் விரும்பினுர்கள்! வெள்ளைக்காரன் வசம் நீதிக்கட்சி தொடர்புகொண்டதற்குக்கூடக் காரணம் இதுதான்!!



கலங்கிய மக்கள்

பார்ப்பனரல்லாதாரும் உத்தியோகங்கள்பெற வேண்டும், உயர்ந்த கல்விகளை அடைய வேண்டும, என்கிற வேட்கை அவர்களுக்கு இந்திய சுதந்திரத்தைவிடப் பெரிதாயிருந்தது. இப்போதுள்ள கக்கன் போன்ருர், காங்கிரஸ் கட்சிதான் பிற்பட்ட வகுப்பினருக்கு கற்பக விருட்சமென வர்ணிக்கிருர்கள்! ஆனல்யாரால் பிற்பட்ட வகுப்புக்கும், பார்ப்பனரல்லாத மக்களுக்கும் 'நீதி' வாங்கித் தரப்பட்டது என்பதை காமராசரே மறுக்கமாட்டார்!!

(தொடரும்)

சுந்தா மறைவு

அண்ண அவர்களுக்கு காரோட்டியாக யிருந்தவரும, இரவோ பகலோ எந்த நேரமானலும் சலிக்காது பணியாற்றிய வருமான தோழர் சுந்தா அவர்கள் இயற்கையெய்திய சேதி கேட்டு மிக மிக வருந்துகிறேம். பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கும், அண்ணவின் இல்லத்தாருக்கும் நமது மனமார்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

அரங்கண்ணல்.



தஞ்சை கலெக் ரிடம் அண்ண ரூ 2000 அளிக்கிருர் வெள்ள நிவாரணத்துக்கு.

பரிதாபம் காணீர் !







1. மாவட்டச் செயலாளர் ப. நாராயணசாமி, துணைச்செயலாளர் கிட்டப்பா, வையாபுரி பட்டு, பெத்தண்ணன், ரங்கநாதன் முதலிய தோழர்களோடு அண்ணு வெள்ளம் போகுமிடத்தில்...
2. தஞ்சைக்கு தஞ்சம் வந்த மாடுகள்.
3. இதைப்போல் பல!
4. ஊரைக் காலிசெய்து ஓடியோர்.
5. கயிற்ருல் காப்பற்றப்படுதல்

இந்தப் படங்களை உதவியவர்:—தஞ்சை ''அறப்போர்'' விற்பனையாளர் ''பகுத்தறிவு பண்ணை''யார்.

பரிசலின்றி போகமுடியாது.

காவல் புரிகின்றனர்.

அடுத்த இதழில் !

1. என் பணி — எம். ஜி. ஆர்.
2. கலையும் வாழ்வும் — எஸ். எஸ். ஆர்.,
3. 'அயல் நாடுகளில் 50 நாள்' (மேயர் முனுசாமி)
4. கோவை மாணவர் மாநாடு

இன்னும் பல! வண்ணங்களோடு

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

விரைவில்,
ஆந்திர,
கன்னட
கேரள
பாடம்
துவங்கும்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12-3. ஏது குறுக்குத்தெரு சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6